Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 04 | 20-11-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 275

## வட்டரீதியாக மாவீரர் ஆலயங்கள் மக்கள் வணக்கத்திற்கு திறப்பு

மாவீரர் வார ஆரம்ப நாளாகிய நாளை காலை 9 மணிக்கு, யாழ். மாவட்டத்தின் சகல வட்டப் பிரதேசங்களிலும் மாவீரர் நாளையொட்டி அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்கள் வைபவ ரீதியாக மதிப்பு வணக்கம் செலுத்துவதற்காக திறந்து வைக்கப்படவுள்ளன. இவ்வாலயங்கள் திறக்கும் வைபவங்களில் அந்தந்த வட்டங்களைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவுருவப் படங்கள் மக்களின் வீரவணக்கத்திற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தம் ஏற்படினும் இராணுவம் யுத்த தயாரிப்புக்களை நிறுத்தமாட்டாது!

## ஹமில்டன் வணசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

**"யுத்தநிறுத்தம் செய்துகொள்வதை இராணுவத் தலைமைப் பீடம் விரும்பவில்லை. அத்துடன் யுத்தநிறுத்தம் ஏற்பட்டால் யுத்தத்திற்கான தயாரிப்பு வேலைகளை எக்காரணம் கொண்டும் கைவிடத் தயாராகவும் இல்லை". இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஹமில்டன் வணசிங்கா தெரிவித்திருக்கிறார்.**

கடந்த வார இறுதியில் தன்னைச் சந்தித்த வெளிநாட்டு செய்தியாளர் ஒருவருக்கே திரு. ஹமில்டன் வணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் ஏற்படும் பட்சத்தில் தற்பொழுது இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் இருந்து ஒரு அங்குலம் தானும் பின்வாங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வழமையான ரோந்து நடவடிக்கைகளும் காவல் கடமைகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தற்பொழுது நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் இருந்தே யுத்தத்திற்கான தயார்படுத்தலை இராணுவத்தினர் தொடர்ந்தும் மேற்கொள்வர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திரு. ஹமில்டன் வணசிங்க கொண்டிருக்கும் மேற்படி கருத்தையே இராணுவ தலைமைப்பீடத்தின் அநேக இராணுவ உயர் அதிகாரிகளும் கொண்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [க, நி]

## எதிர்பாராத மோதலில் மேஜர்கருணாகரன்வீரச்சாவு



மட்டக்களப்பு மாவட்டம் மகிழவெட்டுவான் நரிப்புல் தோட்டம் என்னுமிடத்தில் கடந்த பதின்மூன்றாந் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் மட்டு / அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் கருணாகரன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த மேஜர் கருணாகரனுக்கு (கணபதிப் பிள்ளை உபேந்திரன், மட்டக்களப்பு) விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## விடுமுறை நாள் திருத்தம்

''1995 ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாள்கள்'' என்ற தலைப்பின் கீழ் கடந்த 20 ஆம் திகதி பத்திரிகையில் வெளிவந்த 'தீபாவளி - நவம்பர் 6 திங்கள்' என்பதை தீபாவளி ஒக்ரோபர் 23 திங்கள் [நவம்பர்6 தமிழ் திகதி] எனக் கொள்ளவும்.

'தைப்பொங்கல் ஜனவரி15 ஞாயிறு' என்பதை மேலும் தெளிவாக திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஜனவரி 14

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு பத்திரிகையாளர் வருகை

(வடமராட்சி)

வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் ஐவர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர். நெதர்லாந்து, யு. எஸ். ஏ. இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்களே வந்தவர்களாவர்.

பவுள்ஹேஹன், ஜோறிஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்கலாமென படைமுகாம்கள் உசார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த ஒருவார கால யுத்த நிறுத்தம் முடிவடைவதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவம் உசார் படுத்தப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் வானொலி தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த ஒருவார கால யுத்த நிறுத்தத்துக்கான கால எல்லை முடிவடைவதாலும், மாவீரர் வாரத்திற்கான ஏற்பாடுகள இடம்பெற்று வருவதாலும் புதிய தாக்குதல்கள் எதுவும் நடத்தப்படலாம் என்று சிறிலங்கா படையினர் எதிர்பார்க்கின்றனர்.

அவற்றை எதிர்கொளளும் வகையில் இராணுவம் தயாராகி வருவதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன என சிங்கப்பூர் வானொலி மேலும் தெரிவித்தது.

## ரொனி டி மெல் மகளால் ஆடம்பர கார் கொள்வனவு

### 42 லட்சம் ரூபா பெறுமதியானது

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தின் போது இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட ஆடம்பர வாகனங்கள் அண்மையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட போது அதில் ஒரு கார் 42 இலட்சம் ரூபாவுக்கு முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லின் மகளால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏல விற்பனையின் போது 13 ஆடம்பர வாகனங்கள் 11,725,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது தெரிந்ததே. மற்றுமொரு தொகுதி ஆடம்பர வாகனங்கள் விரைவில் ஏலத்திற்கு விடப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி குடியிருப்பு மீது ஹெலி கலிபர் தாக்குதல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தொண்டமானாறு குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று சரமாரியாகச் சுட்டதில் வீட்டின் கூரைப்பகுதிகளும் கட்டுமரங்கள் வள்ளங்கள் சிலவும் சிறுசிறு சேதமடைந்தன.

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்துநேற்று காலை 8.20 மணியளவில் இவ் உலங்கு வானூர்தி வல்வெட்டித்துறை, தொண்டமானாறு பகுதிக் குடியிருப்புக்கள் மீதும் கடல்பகுதிகள் மீதும் கடும் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

சுமார் அரைமணி நேரம் தொடர்ந்து இப்பகுதிகள் மீது வேட்டுக்களைத் தீர்த்து விட்டு உலங்குவானூர்தி பலாலிக்குசென்றுவிட்டது. [யோ]

## மீனவர்மீது துப்பாக்கிச் சூடு ஒருவர் விரல் இழந்தார்

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு பூநகரி - காஞ்சாட்டுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு நின்ற கடற்றொழிலாளர்களின் வள்ளங்களை நோக்கி அப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

அவர் தொழிலுக்குச் சென்ற வள்ளமும் சேதமடைந்தது. இச்சம்பவத்தின்போது அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டு நின்ற ஏனைய மீனவர்கள் காயமெதுவும் இன்றித் தப்பி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவரான அந்தோனிப்பிள்ளை பூபாலசிங்கம் (மனோன் - வயது 23) என்பவரின் பெருவிரல், சுட்டுவிரல் என்பன முற்றாக சேதமடைந்த நிலையில்

[6ஆம் பக்கம் பார்க்க]

## 'யுனிசெப்' குழு யாழ் வரும்

(யாழ்ப்பாணம்)

ஐவர் கொண்ட யுனிசெப் பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாக யாழ் செயலகம் தெரிவித்தது.

இவர்களின் வருகை தொடர்பாக யாழ் செயலகத்திற்கு 'யுனிசெப்'' தகவல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது

இவர்கள் யாழ் மாவட்டத்தின் யுனிசெப் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற; மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களைப் பார்வையிடவுள்ளனர் என தெரியவருகின்றது (பா.தி)

## அரசியலமைப்பு திருத்த யோசனைகள் சந்திரிகா அரசு வியாழன் வெளியிடும்

(கொழும்பு)

அரசியலமைப்பு திருத்தம் குறித்த யோசனைகளை சந்திரிகா அரசாங்கம் எதிர்வரும் வியாழன் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவதும் இந்த யோசனையில் அடங்கும் அரசியலமைப்பு சீர்திருத்த பாராளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் வியாழன் கூடும் போது இந்த ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்படும் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார்.

பீரிஸ் தலைமையில் அரசியலமைப்புசட்ட நிபுணர்களும் சட்டத்தரணிகளும் கொண்ட விசேட குழு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் யோசனைகளை தயாரித்துள்ளது. அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்கு முன்பாக அரசியலமைப்பு மாற்றப்பட்டுவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## அதிரடிப்படையினரால் பொதுமகன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டு - மாவடி முன்மாரி பிரதேசத்திலுள்ள ஆலையடி முன்மாரி என்னுமிடத்தில் கடந்த பன்னிரண்டாந் திகதி அதிகாலை 5மணிக்குவிசேட அதிரடிப்படையினர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஒரு பொதுமகனை சுட்டுக் கொன்றனர்.

ஆரையம்பதி, காத்தான்குடியைச் சேர்ந்த மாணிக்கப்போடி சுதாகரன் (வயது35) என்ற பொது மகனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதேவேளை கடந்த பதினைந்தாம் திகதி மாவடி முன்மாரிப் பிரதேசத்தில் வயல் பிரதேசங்களை சுற்றி வளைத்த விசேட அதிரடிப் படையினரும் தேசத்துரோகிகளும் பொது மக்களைக் கைது செய்து ஐந்தைந்து பேராக

(6ஆம் பக்கம் பார்க்க)

## சில்லாலையில் விறகு வெட்ட சென்ற பெண்கள் உட்பட 6 பேர் ராணுவத்தினரால் கைது

[யாழ்ப்பாணம்]

சில்லாலை புகையிலை சங்கத்தடிப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற இரண்டு பெண்கள் உட்பட ஆறுபேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலைஒன்பதுமணியளவில் இப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்கள் பதினொரு மணியளவில் இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர்வாரம் உணர்வுபூர்வ ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழம் முழுவதும் மாவீரர் வாரம் நாளை எழுச்சியுடன் ஆரம்பமாகின்றது. நாளை காலை 9 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபன அலுவலகங்கள், பாடசாலைகள், பொதுநிறுவனங்கள்,சனசமூக நிலையங்கள், தொழிற்சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சழகங்கள், போராளிகள் பாசறைகள், விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் ஆகிய இடங்களில் கொடியேற்றப் பாடல் இசைக்கப்பட தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படும்.

மாவீர வார நாட்களில் மாவீரர்களது உருவப்படங்கள் பந்தலிட்டு வைக்கப்பட்டு புனிதமாக அலங்கரிக்கப்பட்டு மலரிடப்பட்டு, மரியாதை வணக்கம் செலுத்தப்படும். மேலும் வட்டாரீதியாக சிறப்புற அமைக்கப்படும் மாவீரர் பந்தல்களில் மக்கள் தங்கள் உளப்பூர்வமான அஞ்சலிகளை செலுத்துவர்.

மாவீரர் வாரத்தின்போது மாவீரர் வீரவணக்க கூட்டங்களும் மாவீரர் புகழ்பாடும் கலை நிகழ்வுகளும் கவிதா அரங்குகளும் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, யாழ் குடாநாடு முழுவதும் சிகப்பு மஞ்சள் நிறக் கொடிகளாலும், வீதி வளைவுகளாலும், பதா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பெப்ரவரி 8ஆம் திகதி புதிய வரவு செலவுத்திட்டம்

### சந்திரிகா சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

புதிய அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் நிவாரண மற்றும் புனருத்தாரண வேலைகளுக்கு முக்கிய இடம் வழங்கப்படுமெனவும், சிறிலங்காவில் மூலதனமிடும் வெளிநாட்டவர்களுக்கு பல்வேறு சலுகைகள் பற்றி அறிவிக்கப்படுமெனவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெப்ரவரி மாதம் எட்டாந் திகதி பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே சமர்ப்பிப்பார் எனவும் தெரிய வருகின்றது.

## ஊழல் புரிந்தோர் தப்பியோடாது தடுக்க விமான நிலையத்தில் விசேட குழு

(கொழும்பு)

சென்ற அரசாங்கத்தில், இலஞ்சம் ஊழல்புரிந்தவர்கள் எனக் குற்றஞ்சாட்டப் பட்டவரும் நாட்டை விட்டுத் தப்பியோடா வண்ணம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் கொழும்பு துறைமுகத்திலும் கண்காணிப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன

இவ்வகையான குற்றவாளிகள் நாட்டை விட்டு வெளியேற முற்படும் பட்சத்தில் அவர்களை இனங்கண்டு கைதுசெய்யவென சோதனையாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது

இதனையடுத்து, கட்டுநாய

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் 4-வது ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலியின் நான்காம் ஆண்டு நிறைவுவிழா இன்று பி.ப 3. 30 மணியளவில் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிதர்சனம் பொறுப்பாளர் நா. தமிழன்பன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், நான்காம் ஆண்டு நினைவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் சிறப்புரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## வரி விளம்பரம்

**இறைச்சிக் கோழி**
இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு 698/15 சபாபதி வீதி, தலையாழி. (வைரவர் கோவிலுக்கண்மையில்) யாழ் (10132)

**விற்பனைக்குண்டு**
முட்டையிடும் ஊர்க் கோழி கல் பண்டம், பாமாஸ், பிறிசில், புறாமா, சிக்கி, விற்பனைக்குண்டு. சந்தசாப அன்சன்16, ஆடியபாதம் வீதி, நல்லூர். [10135]

**11.11.94 முதல் வியாழ மாற்ற பலாபலன்கள்**
சத்யாவின் எல்லா ராசிகளின் பலன்கள் ரு 10/- எங்கும் விற்பனையாகின்றது பாடசாலை உபகரணங்கள் O/L. A/L வினா விடைகள் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. வடிவேல் புத்தகசாலை 307, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (10142)

**"நீமியா உரம்"**
நெற்பயிரில் பூச்சிகளின் தாக்கத்தைப் போக்கவும், அதிக விளைச்சலுக்கும் சிறந்த இயற்கை உரம் 'நீமியா உரம்'' தொண்டைமானாறு சமநல சேவை நிலையத்தில் விற்பனைக்குள்ளது. பாவியுங்கள், பயன்பெறுங்கள் ''மிக்வைற்'' (சி - 10741)

**கறுப்புச்சடை பொமினேறியன்**
மிக செல்லமாக வளர்க்கப்பட்ட 1½ வயதுடைய கறுப்புச்சடை பொமினேரியன் நாயை வெள்ளியிலிருந்து காணவில்லை. ஊசிமருந்துடன் மட்டும் உயிர்வாழும் இதை கண்டவர்கள் தயவு செய்து திருநெல்வேலி சிவன் வீதியிலுள்ள ஜெனரேட்டர் ஒழுங்கையில் வசிக்கும் பிரபாகரா விற்கு தகவல் தரவும் சன்மானம் தரப்படும் (10134)

**விசேட கழிவு**
இலகு தோசைமா, இட்டலிமா, அப்பம்மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகல அண்ணா கொழிலக கிளைகளிலும் (சி-10676)

**வீடு, காணி விற்பனைக்கு**
சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு அருகாமையில் 1½ பரப்புக் காணியும் கல் வீடும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. மா. ஸ்ரீ ரவி குலன் நுணாவில் கிழக்கு சாவகச்சேரி, (10144)

## ஆங்கில கற்கை நெறி பதிவுகள்
(யாழ்ப்பாணம்)
யாழ். திறந்த பல்கலைக்கழக பிராந்திய ஆங்கிலக் கற்கை நெறிக்கான பதிவுகள் 21 ஆம் திகதி வரை நடைபெறும் என்று மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் திரு. ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

## கொலரா பரவுகிறது
(நல்லூர்)
குருநகர்ப்பகுதியில் மீண்டும் கொலரா நோய் பரவ ஆரம்பித்துள்ளதாக இப்பகுதியில் கடமையாற்றும் குடும்பநல உதவியாளர்கள் தெரிவிக்கிறார்கள் குருநகர் 2-ம் வட்டாரம் பகுதியில் உள்ள குடியிருப்பொன்றிலும், குருநகர் 5-ம் வட்டாரப் பகுதியிலும் இந்நோய் உள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் எனவும், உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இவர்கள் இப்பகுதி மக்களுக்கு வீடுவீடாகச் சென்று தடுப்பு ஆலோசனை வழங்கி வருகிறார்கள். (17)

புலிகளுடனான பேச்சு வார்த்தை

## ஒத்துழைப்பு வழங்காத அதிகாரிகளுக்கே மாற்றமாம்

திருமதி சந்திரிகா குமாரதுங்க பிரதமராக இருந்த போது விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த பேச்சுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்காததே பாதுகாப்பு உயரதிகாரிகள்சிலரின் உடனடி இடமாற்றத்திற்கு காரணமாகும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்றவுடனிருந்து, பாதுகாப்பு உயரதிகாரிகள் மாற்றத்தில் தீவிரம் காட்டி வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத ஆயுதங்கள் குறித்து

## வெளிநாட்டு தூதரக அதிகாரிகள்மீது விசாரணை

(கொழும்பு)
ஐ.தே.க அரசாங்கத்தில் சட்டவிரோத குழுக்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கியது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு, மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் 20 அதிகாரிகளுக்கும் எதிராக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு இரகசியப் பொலிசாருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

விசாரணைகள் தொடரப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்களும் இரகசியப் பொலிசாரின் விசாரணைக்கு உள்ளாகலாம் எனவும் தெரியவருகின்றது.

## விற்பனைக்கு

தரத்தில் உயர்ந்த நில்கிகி. பாமஸ். காப்பிலி, பெண்டம். இனிக்கோழி. வெள்ளையன், வான் கோழி, தாரா, மணித்தாரா போன்றவற்றின் அடை வைப்பதற்கான நல்லின முட்டைகளை உடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை
இராஜ வீதி,
கோப்பாய்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.
(சி/ 10742)

## கண்ணீர் அஞ்சலி

செல்வன்
**வல்லிபுரம் விஜயரட்ணம்**
[மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி]

18-11-94 அன்று அன்னாரின் அகால மரணத்தினால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கைதடி நுணுக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்
[10145]

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 20 - 03 - 1969

வீரச்சாவு: 19 - 11 - 1992

கடலிலே காவியமான
**மேஜர் சாம்பசிவம்**
(மகாலிங்கம் ரவிச்சந்திரன்)
உடுத்துறை

தாயைவிட தாய்மண்ணை நேசித்தாய்
தாயகமண்மீட்டிட தலைவன்
அணியிலே தானை நடத்தினாய்
எம் கடலில் எதிரியின் கொட்டத்தை
அடக்கவே கடற்புலியாகி நின்றாய்
ஈராண்டென்ன ஈராயிரம் ஆண்டுதான்
ஆனாலும் ரவி என்னும் நாமம் எம்
மனதைவிட்டு நீங்காது. அகலாது

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய ஐந்து போராளிகளிற்கும் எமது வீர அஞ்சலிகள்.

20-11 1994 ஞாயிற்றுக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விக்னம் வீதி,
உடுத்துறை வடக்கு.
(10069)

இவரது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## குழாய்க்கிணறு அமைப்பு

யாழ் சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவுடன் வடமராட்சிப் பிரிவில் மாயக்கை குடியேற்ற கிராம மக்களுக்கு குடிநீர் பாவனைக்காக குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளது இக்குழாய்க்கிணறு அல்வாய் கிழக்கு கிராம அலுவலர் திரு. வே. தியாகராசா வினால் திறந்து வைக்கப்பட்டது இதற்கான நிலத்தை திரு சி. கிருஷ்ணபிள்ளை அன்பளிப்பாக வழங்கினார் (யோ)

## கோமாரியில நிவாரண பொருள்

கோமாரி கப்பல் இம்மாதம் 26-ம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகிறது

இக் கப்பலில் அரிசி, மா, சீனி ஆகிய பொருட்கள் செயலகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.

இக் கப்பல் வந்து சேர்ந்ததும் இடம் பெயர்ந்தவர்களிற்கான இவ்வார உலர் உணவு விநியோகம் அடுத்த கட்டம் ஆரம்பிக்கப்படும் என செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இ. தி

## மாவீரர் நினைவு ஆலய திறப்பு விழா அழைப்பிதழ்

மானிப்பாய் வணிகர் கழகத்தினால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவு ஆலயத் திறப்புவிழா 21-11-94 திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெற உள்ளதால் சகல வணிகர் கழக அங்கத்தவர்களும் அனைத்து தமிழீழ மக்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(10149) இப்படிக்கு - நிர்வாகம்

## நல்லினபழமரக்கன்றுகள் விற்பனை

மாவீரர் தினத்தை முன்னிட்டு 10% கழிவுடன் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்.

### விற்பனைக்கென விடப்படும் மரக்கன்றுகளின் விபரம்

★ ஒட்டுத்தேசி
★ ஒட்டுத் தோடை
★ நெல்லி
★ லாவுலு
★ கொய்யா (1கிலோ நிறை உடைய)
★ நல்லின மாங்கன்று
★ பப்பாசி (கிட்டு 92)
★ மாதுளை (3 மாதத்தில் பயன்தரும்)

இன்னும் விரைவில் பயன் தரும் கமுகு, தென்னம்பிள்ளை, ஏனைய பழமரக்கன்றுகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.-

மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை
இராஜ வீதி, கோப்பாய்.
கிளை 1
பூங்கனியல் தோட்டம்
(முதன்மைச் செயலகம் முன்பாக)
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.
(சி/10743)

## ஈராண்டு நீங்கா நினைவு



**கடற்புலி கப்டன் கோணேஸ்வரன்**
(குகதாஸ் பாலதாஸ்)

ஆழ் கடலில் -
அழியாத புகழோடு சென்றாய்
அடி மனதில் -
ஆறாத புண்ணாகி நின்றாய்.

இவரது இரண்டாவது ஆண்டுத் திவசம் 23-11-94 அன்று அனுஷ்டிக்கப்பட இருப்பதால் அனைவரையும் இதில் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

கிருஸ்ண பவனம்
கல்வியங்காடு
- குடும்பத்தினர்
(10138)

## நினைவு கூருகின்றோம்...

### 20. 11. 1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து பின்னர் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**சிவா** (முருகுப்பிள்ளை சிறிதரன் - ஆலடி ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நேசன்** (குலசேகர முரளிதரன் - மாசுவன், நீர்வேலி, வடக்கு - யாழ்)

கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சோபன்** [சந்திரன் ராஜ்குமார் - தெய்வங்கேணி வீதி சரசாலை வடக்கு - சாவகச்சேரி]

கிளிநொச்சி - ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**விக்னா** (தனபாலசிங்கம் மகேந்திரகுமார் - அல்லாரை தெற்கு, மீசாலை - சாவகச்சேரி)

1991-ம் ஆண்டு பூநகரி - பள்ளிக்குடா முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாதன்** (பாக்கியராசா சிவராஜ் - பொத்துவில் - அம்பாறை)

**2-ம் லெப். சாந்தன்** அழகலிங்கம் சாந்தலிங்கம் - பெரியபோரதீவு - மட்டு)

**ஜேக்கப் - அருணா** (சிவபாதசுந்தரம் சர்மிலன் - அத்தாய் - பூநகரி)

**கப்டன் ரமேஸ் - தர்மன்** (புகழேந்திரன் சிறிரமணன் - பாலக்குழி வீதி, அரியாலை - யாழ்)

1992-ம் ஆண்டு தமிழீழக் கடலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் சாம்பசிவம்** (மகாலிங்கம் ரவிச்சந்திரன், உடுத்துறை, தாளையடி)

**கப்டன் கோணேஸ்வரன்** (குகதாசன் பாபுதாஸ், திருஞானசம்பந்தர் வீதி, திருமலை, த.மு. கோப்பாய் வடக்கு)

**கப்டன் தர்மன்** (சோமசுந்தரம் தர்மராசன், குச்சவெளி, திருமலை, த.மு. புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

**கப்டன் ஈழவேந்தன்** (துரைராசன் குமரேசன், தமிழ்நாடு)

**லெப். ரூபன்** (வேலுப்பிள்ளை அருண்ராஜ் மானிப்பாய்)

**2-ம் லெப். இசைவாணன்** (பரமசிவம் பத்மராசா, 95, நாவாந்துறை, சூரியவெளி, யாழ்)

1993-ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக்கடற்படை கூட்டுத்தள மீது "ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**முத்தமிழன்** (முருகையா ஜெயகாந்தன் - 3ம் படிவம், கல்மடு - வவுனியா)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10740)

## 31-ம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்



மண்ணில் 23-10-69

விண்ணில் 22-10-94

திதி: 20-11-94

செல்வன்
**பாலேந்திரன் பிரபாகரன்**
(கனடா வாட்டர்லூ பல்கலைக்கழக 3-ம் வருட மின் பொறியியல் மாணவன்)

மீண்டு வந்தாற் பார்த்து
மனம் மகிழ எண்ணினமே
மாண்ட துயரச் சேதி
மாற்றரிய துயரமடா.
தூக்கி வளர்த்த கைகள்
துடித்துக் கிடக்குதையா
விக்கம் எழுத்தழுது
வெம்புகிறோம் என் செய்வோம்.

"துவாரகா''
சாமியன் அரசடி,
கரவெட்டி.

இறைஞ்சுகின்றோம்
தந்தை, தாய், சகோதரர்.
(10116)

# "ஒழுக்கக் கட்டுப்பாடும் கடும் பயிற்சியுமே என்னை ஒரு முன்னணி வீரனாக்கியது"

## உதைபந்தாட்ட வீரர் லெஸ்லிறோயுடன் ஒரு நேர்காணல்

யாழ்ப்பாணத்தின் முன்னணி உதைபந்தாட்டக் கழகங்களில் ஒன்றான பாஷையூர் சென். அந்தனிஸ் கழகத்தின் நட்சத்திர ஆட்டக்காரர் பெரிய றோய் மெலிந்த தோற்றம் எப்போதும் புன்னகையுடன் காணப்படும் இயல்பு தீவிரமான விளையாட்டின் போதுகூட இயல்பாக அமைந்துவிட்ட இப்புன்னகை மாறுவதில்லை. ரசிகரைக் கவரத்தக்க வகையில் கள நிலை அறிந்து எங்கும் நின்றாடும் பாங்கு. இவை இவருக்கேயுரியன இவருக்கென யாழ். உதைபந்தாட்ட ரசிகர் மத்தியில் தனியிடம் ஒன்றுண்டு தனது திறமையாலும், விளையாட்டுப் பண்புகளாலும் ரசிகர் மத்தியில் நிரந்தர கௌரவம் ஒன்றை இவர் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார் ஈழநாதம் விளையாட்டரங்கு சார்பில் றோயைச் சந்தித்து அவரது அனுபவங்களைக் கேட்டோம்.

ஞானசப்பிள்ளை லெஸ்லி றோய் 20-10-67-ல் பிறந்தவர். சிறியவயதிலேயே உதைபந்தாட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்டவர்.

☐ உங்கள் உதைபந்தாட்டப் பிரவேசம் எப்படியாரம்பமாயிற்று?

எனது உதைபந்தாட்ட வாழ்வு மிகச் சிறிய வயதிலேயே, கழகத்துடன் இணைந்ததாகவே ஆரம்பித்தது. பெரியவர்கள் விளையாடும்போது நானும் மைதானத்தில் சென்று பார்வையிடுவேன், விளையாடுவேன் மேலும் கழகம் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும்போது நானும் கலந்துகொள்வேன், பாடசாலை உதைபந்தாட்டத்துடன் மிகவும் பின்னதாக 19 வயதிற்குட்பட்ட மட்டத்திலேயே என்னை இணைத்துக்கொண்டேன் ஆரம்பக்கல்வியை செழும்புத்துறை சென். யோசப் வித்தியாலயத்தில் பெற்றேன். பின்னர் 6-ம் வகுப்பு முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன் ஆண்டு 85, 86-ல் 19 வயதுக்குட்பட்ட பிரிவு அணியில் அங்கம் வகித்தேன் அது ஒரு உன்னதமான காலம் ஆனால் பாடசாலை சட்ட திட்டங்களுக்கு அமைய நான் எனது கழகத்திற்காக இக்காலகட்டத்தில் விளையாடவில்லை.

☐ உங்கள் கழக உதைபந்தாட்டம் பற்றி..?

1986-ல் சென். அந்தனீஸ் (பாசையூர்) கழகத்துடன் நிரந்தர உறுப்பினனாக இணைந்தேன் அன்று முதல் ஒரேகழகந்தான் இதில் எதுவித மாற்றமும் இல்லை கழகத்துக்கு என்னாலான பங்களிப்பினைச் செய்துள்ளேன். அதேவேளை நீண்டகாலம் ஒரே அணியில் இணைந்து விளையாடுவதால் நான் பெற்ற அனுபவங்கள், படிப்பினைகளும் அதிகம்.

☐ நீங்கள் பல சந்தர்ப்பங்களில் நிலைகளை மாற்றி விளையாடுவதாகக் கூறப்படுகிறதே?

ஆரம்பத்தில் நான் முன் வரிசை வீரனாகவே தொடர்ந்து ஆடிக்கொண்டு வந்தேன். ஆனால் தற்போது மத்திய வரிசையில் நின்று ஆடுகின்றேன். இதற்கொரு காரணம் உண்டு. இளையவர்கள் எமக்குப் பின்னால் நின்று கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் தடையாக இருக்கக்கூடாது. திறமையானவர்களை அவர்களின் நலன் கருதி நிலைகளைக் கொடுத்து பயிற்றுவித்துக் கொண்டு வரவேண்டும். இன்னொரு காரணம் ஓரளவில் அனுபவம் பெற்றபின் எந்த நிலையிலும் நின்று அணியை வெற்றிப்பாதையில் கொண்டுசெல்லும் பக்குவம் பெற வேண்டும் இங்கு முக்கியம் அணியின் வெற்றியே.

☐ நீங்கள் வயதில் மிக இளையவராகக் காணப்படுகிறீர்கள் ஆனால் றோய் என்ற பெயர் மிகப் பிரபலமானதாக இருக்கிறதே?

உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை 27 வயதென்பது கூட முதிர்ந்த வயதுதான் மிகவும் இள இரத்தங்களுக்கு உரிய ஆட்டம் இது. நான் ஒழுங்கு கட்டுப்பாடு பயிற்சி என்பவற்றில் மிகத் தீவிரமாக இருக்கின்றேன் எனது பயிற்றுநர்களும் இதனையே போதித்து வந்துள்ளனர் இந்தக் கட்டுப்பாடும் அர்ப்பணிப்பும்தான் என்னால் ஓரளவிற்கு முதன்மை பெற முடிந்தமைக்குக் காரணங்கள் என்று நான் எண்ணுகின்றேன். சிறுவயதில் இருந்தே திட்டமிட்ட முறையில் இவற்றைப் பின் பற்றி வரவேண்டும் என்பது மிக முக்கியம்

☐ 92இல் நீங்கள் அணித்தலைவராக இருந்துள்ளீர்கள் உங்கள் அனுபவம் எப்படி?


எங்களை விட அற்புதமான வீரர்களைக் கொண்டிருந்த அணி சென் அன்ரனீஸ் அணி ஆனால் பல சிறந்த விளையாட்டு வீரர்கள் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அகலவே 91ல் நாம் ஓரளவு பலம் குன்றிய நிலைக்குள்ளானோம் 91ல் ஒரேயொரு சாம்பியன் பட்டத்தையே எம்மால் வெற்றி கொள்ளமுடிந்தது. இதனால் திட்டமிட்டு எல்லோரும் இணைந்து கழகத்தைவளர்த்தோம். 92க்கான அணித்தலைவரானேன். எனக்கு சகல தரப்பாரிடமும் இருந்து நிறைய ஒத்துழைப்புக் கிடைத்தது. இவ்வேளையில் நான் எல்லோரையும் மிக நன்றியுடன் நினைவுகூரவேண்டும். இன்று இன்னமும் பலத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

☐ இப்படியொரு வினாவை நாங்கள் வினவவிரும்பாவிட்டாலும் அதைத் தவிர்க்கவும்முடியவில்லை முறைதவறிய விளையாட்டு- Foul Game பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

தவறு என்பதும் தவிர்க்க முடியாததுதான் ஆனால் தவிர்க்க முடியாமை என்பதற்குக் காரணங்கள் காட்ட முற்படுவதை விடுத்து தவிர்த்துக்கொள்ள முயலவேண்டும் Foul என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. அது சிவப்பு அட்டைவரை கொண்டு செல்லும் "நான் திட்டமிட்டு தவறாக விளையாடமாட்டேன்" என்று திடசங்கற்பம்செய்து கொண்டால் நிச்சயம் மத்தியஸ்தர் கூட அப்படியான சந்தர்ப்பங்களைப் புரிந்து கொள்வார் 92ல் எனது தலைமையில் ஒரு ஆட்டத்தில் எமதணி வீரர் ஒருவர் வெள்ளைக்கு முறைதவறி அடித்துவிட்டார் அடுத்து வந்த இரண்டு ஆட்டங்களில் இதற்காக அவரை நாங்கள் விளையாட அனுமதிக்கவில்லை; இதில் இருந்து எமது நிலைப்பாட்டை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என எண்ணுகின்றேன்.

☐ உங்கள் வெற்றிக்கு திட்டமிட்டபயிற்சி அவசியம் என்கிறீர்கள் அது எவ்வாறு அமையவேண்டும்?

இன்று மைதானத்தில் இறங்கும் இளைஞர்கள் கன்னை பிரித்து விளையாடுவதிலும்' பந்தை வேகமாக உதைப்பதிலும் பெரிதும் ஆர்வங் கொள்கிறார்கள் ஆனால் விளையாட்டுப்பயிற்சி என்பது அப்படியல்ல மைதானத்தில் பயிற்சிக்கென்று இறங்கினால் முதலில் உடற்பயிற்சிகள் செய்யவேண்டும் மைதானத்தில் ஓடவேண்டும்



**சீனியர்றோய்**

அதன் பின்னர் பந்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பயிற்சி என்பதில் (Ball Controlling) நீண்டநேரம் செலவிட வேண்டும். உங்கள் சொற்கேளாத பந்தை நீங்கள் என்னதான் செய்யமுடியும். இதெல்லாம் முடிந்த பின்தான் விளையாட்டில் ஈடுபடவேண்டும் அவ்வேளையில் சட்டங்கள் விதிகளை தீவிரமாகப் பின்பற்ற வேண்டும் இதுவே திறமையை வளர்த்துக் கொள்ள உரிய வழியாகும். இதற்கு பொறுமையும் அர்ப்பணிப்பும் மிக அவசியம்.

☐ நீங்கள் அணித் தலைவராக இருந்துள்ளீர்கள் இன்றும் ஒரு சில மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் கூட. இன்றைய தலைமுறை வீரர்கள் உங்களை எப்படி நோக்குகிறார்கள்?

நான் புரிந்துணர்வுடன் நடந்து கொள்பவன். இளையோர் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் உடையவர்கள் தம் அணியை மேன்மையுறச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் இதனால் மிக நட்புடன் உரிமையுடன் அவர்களுடன்செயற்படமுடிகிறது.

☐ நீங்கள் பாடசாலை அணியொன்றின் பயிற்றுநராகவும் உள்ளீர்கள் பயிற்றுநர்பணியை எவ்வாறு ஏற்கிறீர்கள்?

சிறந்தவர்களை உருவாக்க நல்லதொரு சந்தர்ப்பம் நான் யாழ்/மத்திய கல்லூரி 19 வயதிற்குட்பட்ட அணியை பயிற்றுவிக்கிறேன். நல்ல இளைஞர்கள் மகிழ்ச்சியான வேளை பொதுவாக பயிற்றுநர் என்ற வகையில் நான் சில விடயங்களைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன் பயிற்றுநருக்குக் கட்டுப்படவேண்டும் பயிற்சிகளைஒழுங்காக மேற்கொள்ளவேண்டும் தினமும் உடற்பயிற்சிகள் செய்யவேண்டும் விளையாட்டைப் புனிதமாகக் கருதவேண்டும் எமது பயிற்றுனர்களின் கடுமையால் தான் நான் முன்னேற முடிந்தது நான் அணித்தலைவராக இருக்கையிலேயே நேரம் பிந்தியமைக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளேன்.

☐ உங்கள் பயிற்சியாளர்கள் பற்றி?

இந்தவேளையில் பலரை நான் நினைவு கூரவேண்டும். சில்வெஸ்டர், ஹெர்மன் அண்ணர் பாஸ்கரன் அந்தனிப்பிள்ளை மாஸ்ரர். இவர்கள் எல்லோருமே என்னில் மாற்றங்களைஏற்படுத்தியுள்ளார்கள் நாங்கள் சிறுபையன்களாக மைதானம் திருத்த உதவிபுரிவோம் வேலை முடிந்தபின் அந்தனிப்பிள்ளை மாஸ்ரர் மைதானத்தில் எங்களை விளையாடவிடுவார். சொல்லித் தருவார் பாஸ்கரன் 92-ன் பயிற்றுநர் அணித்தலைவன் நான் என்றும் பாராமல் தண்டித்தவர். வித்தையைக் கற்றுத்தந்தவர்கள் பற்றி இலகுவாக கூறி முடித்து விடமுடியாது.

☐ நீங்கள் நினைவு கூரத்தக்க ஆட்டங்கள்?

எதையும் மறக்கமுடியாது ஒவ்வொரு ஆட்டத்திலும் கற்றுக்கொண்டே வருகிறேன். எனினும் ஓரிரண்டு விடயங்களைக் கூறலாம். 92-ல் உ. அ. அதிபர் பிரிவு ஆட்டத்தில் பாடும்மீன் அணியைச்சந்தித்தோம் எப்பொழுதுமே ரசிகர்களைக்கவரும் சோடிகள் நாங்கள். சனவெள்ளம் என்று கூறவேண்டும் பாடும்மீன் அணியினர் மிகப்பலமானவர்கள் அந்த ஆட்டத்தின் ஒவ்வொரு நகர்வும் நினைவில் நிற்கின்றது. அற்புதமான ஆட்டம் அது. அடுத்து கொக்குவில் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடாத்திய சுற்றுப்போட்டி. ஒவ்வொரு ஆட்டமும் சிகரந்தான் இறுதிப்போட்டி எமக்கும் சென். கென்றிஸ் அணிக்கும் இடையில் இதுவும் என் நினைவில் நிற்கும் ஒரு ஆட்டம்

☐ இன்றைய உதைபந்தாட்டத்தரம் வீழ்ச்சியுற்றுக் கொண்டு போவதாக ஒரு கருத்து நிலவுகிறதே?

இதனை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டே தீர்மானிக்கவேண்டும். வசதிகள், வாய்ப்புக்கள் எவ்வளவு குறைவென்பதை நீங்களே உணர்வீர்கள் இச்சூழலிலும் இந்தளவு தரத்தை உதைபந்தாட்ட வீரர்களும்கழகங்களும் பேணுகிறார்கள் என்பது நிச்சயம் வளர்ச்சி என்றவாறுதான் நோக்க வேண்டும் இவ்வளவு ஆபத்துக்களுக்கிடையில வாழ்ந்து கொண்டு எமது உளத்தை தைரியத்தை வளர்த்துக்கொண்டு உதைபந்தாட்டம் ஆடுகிறோம் இது வளர்ச்சிதானே

☐ உங்களுக்குப் பிடித்தமான உதைபந்தாட்ட வீரர் யார்?

வெள்ளைதான் மைதானத்தினுள்ளும் வெளியிலும் ஒரு உதைபந்தாட்ட வீரன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டுமென்றால் அடுத்தகணம் வெள்ளையைப் போல இருக்கவேண்டுமென்பேன் இதற்கான நியாயங்களை நான் கூறத்தேவையில்லை. பல்லாயிரக் கணக்கான ரசிகர்களே கூறுவார்கள்.

☐ யாழ்ப்பாண ரசிகர் பற்றிய உங்கள் நோக்கு எவ்வகையானது?

அவர்கள்தான்எனதுசொத்து அவர்களே நீதிபதிகள் மைதானத்தில் இருந்து வெளியேறுகையில் வெற்றிதோல்வி என்பது ஒருபுறமிருக்க, என்னை அவர்கள் எவ்வாறு கணித்தார்களோ என்றொரு பயம் மனதில் ஏற்படும் அற்புதமான ரசிகர்கள் அவர்களுக்குப் பயப்படுவதாலேயே என் ஆட்டம் இன்னும்மெருகு பெறுகிறது. என்பேன் என் மீது கொண்ட விருப்பத்தால் அறம்புறமாக ஏசியும்கூட கடிதங்கள் வரும் அது விளையாட்டில் மென்மேலும் முன்னேற அறிவுரைகள் தரும். நினைக்கவே சந்தோசமான விடயங்கள்.

☐ சுற்றுப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் கூடிவிட்டதல்லவா?

நிச்சயமாக பிரசித்தமான அணியென்ற வகையில் எம்மையும்கேட்பார்கள் நாமும் பங்குகொள்வது கடமை ஆனால் இது வீரர்களைப் பாதிக்கும் வேறு சுற்றுப்போட்டி களுக்கு இடையூறாக இருக்கும் நான் ஒருநாளில் இரண்டு ஆட்டங்கள் ஆடிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தும் 92, 93 உடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குறைவென்றுதான் கூறவேண்டும்

**நிர்மலன்**

பாஷையூர் அந்தோனியார் ஆலய காலை ஆராதனை முடிந்த கையோடு ஆலயத்தில் இருந்து வந்த றோயை நானும் விளையாட்டு அரங்கு சார்ந்த எஸ் தயாபரனும் றோயின் வீட்டில் சந்தித்தோம் இவ்வருட சென் அன்ரனீஸ் அணித்தலைவர் செவினும் எம்முடன் கூட இணைந்து கொண்டார் நீண்ட நேரம் சுவையாக உரையாடினோம் றோய் உதைபந்தாட்ட வீரர்களைப் பற்றி நிறைய வே கவலைப்படுகின்றார் ஆசையுடன் விளையாடும் உதைபந்தாட்டம் உடல் நிலையை பாதித்தால் வீரர்களின் குடும்பங்களின் நிலை என்ன என்று விசனப்படுகின்றார் 27 வயது இளைஞர் மிக அனுபவசாலியாகச் சிந்திக்கிறார். உரையாடலின் ஊடே அவரது மனிதநேயப் பாங்கை நிறையவே உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. சகோதரர்கள் ஏழுபேர் இரண்டு சகோதரிகளும் திருமணமாகிவிட்டனர் ஒருவர் திருமணம் செய்து இலங்கை உதைபந்தாட்ட வீரராகத் திகழ்ந்தவரான பிரான்சிசை. சகோதரர்கள் ஐவர் டைட்டஸ், ரவி பாடசாலை மட்டத்தில் உதைபந்தாட்ட வீரர்களாகத் திகழ்ந்தவர்கள். டன்ஸ்டன் சென். அந்தனீஸ் கழகத்தின் முக்கிய உறுப்பினராகத்திகழ்ந்தவர்

றோய் இன்னமும் திருமணம் செய்யவில்லை அது பற்றிப் பேசியபோது. தந்தையாரும் உடன் இருந்ததாலோ என்னவோ மிகவும் கூச்சப் பட்டுப்போனார். அருமையானதொரு சூழலில் நாங்கள் நால்வர் மிக சுலபமாகவும் சுமுகமாகவும் உரையாட முடிந்தது அந்த ஞாயிறு எம் எல்லோருக்கும் மிகவும் சந்தோசமாக அமைந்த நாள் அதில பிழிந்தெடுத்து விளையாட்டரங்கு நேயர்களுக்கு இங்கு தரமுயற்சி செய்துள்ளோம்.

# விளையாட்டு அரங்கு

### யாழ். மிட்ரவுண் றோட்ரறக்ற் கழக உதைபந்தாட்டதொடர்

# சென். கென்றீஸ்-ஞானமுருகன் அணி இறுதிவரை பலமாகவே மோதின

யாழ் மிட்ரவுண் றோட்ரறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத்தொடரில் கடந்த புதன் கிழமை இரண்டு ஆட்டங்கள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தன. இருந்தும் இளவாலை சென். கென்றீஸ் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையிலான ஒரு ஆட்டம் மட்டுமே நடைபெற்றது. நேரத்திற்கு சமூகமளிக்கவில்லையென்ற காரணத்தால் ஸ்கந்தாஎதிர்சென். அந்தனீஸ் ஆட்டம் நீக்கப்பட்டதுடன் இரு கழகங்களுக்கும் புள்ளிகளும் வழங்கப்படவில்லை என்பதை ஒழுங்கமைப்பாளரிடம் இருந்து அறிந்து கொள்ள முடிந்தது.

மாலை 4. 20 மணியாவில் ஆரம்பித்த மற்றைய ஆட்டத்தில் இளவாலை சென் கென்றீஸ் வி.க வை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் வி. க. மோதியது ஆரம்பத்தில் ஞானமுருகன் அணியினர் தமக்குகிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர். இப்போட்டியிலும் றதிஸ்வரன் தனது திறமையை காட்ட தவறவில்லை.

ஆட்டம் தொடங்கி 20 ஆவது நிமிடம் சென் கென்றீஸ் அணி வீரர் நேசன் தமது அணிக்காக முதலாவது கோலை போட்டார் இவர் இப் போட்டி முடியும் வரை திறமையாக விளையாடி பந்தினை 'பலவீரர்களைத் தாண்டி வலது இடதுபக்க முன் வரிசை வீரர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்-

இப்போட்டியில் இரு அணிகளினதும் நம்பிக்கை நட்சத்திரங்கள் என ரசிகர்களால் பேசப்படும் சென் கென்றீஸ் வீரர் ஜெயக்குமார், ஞானமுருகன் வீரர் சிந்து இருவரும் தமக்குக்கிடைத்த பலசந்தர்ப்பங்களை கோலாக மாற்றத் தவறியதும் கோல் கம்பத்துக்கு வெளியே அடித்ததும் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது.



எனினும் ரசிகர்களின் ஆவலை திருப்திப்படுத்தும் விதமாக இடைவேளைக்குப் பின் சென் கென்றீஸ் வீரர் ஜெயக்குமார் 19 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக இரண்டாவது கோலை போட்டார் இதன் பின் ஞானமுருகன் அணியினர் சளைக்காமல் எதிரணியினரின் மீது அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர் இடைவேளையின் பின் 24 நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் பாபு தமது அணிக்கான முத

**எஸ். தயாபரன்**

[4ஆம் பக்கம் பார்க்க]

### "நினைவில் நின்று நிமிர்வோம்"

# சிறப்புற இடம் பெற்றுமுடிந்த ஆண், பெண் சைக்கிள் ஓட்டங்கள்

மன்னார் மாவட்டத் தளபதி மாவீரர் லெப். கேணல் விக்டர் ஒஸ்கா, 2-ம் லெப் ரோம் ஆகியோரின் 8-ம் ஆண்டுநினைவாக 'நினைவில் நின்று நிமிர்வோம்' விளையாட்டு விழாவில் நடைபெற்ற பல்வகைப் போட்டிகளில் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள், வீதி ஓட்டப் போட்டிகள் போன்றவையும் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவை ஆண், பெண் இருபாலாருக்கும் நடைபெற்றன.

60 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டம்(ஆண்கள்)

49 வீரர்கள் விண்ணப்பித்து 38 வீரர்கள் போட்டியிட்ட ஒரு சிறப்பான போட்டியாக அமைந்தது இப்போட்டியாகும். குறிப்பிட்ட நேரத்தில் 12-ந் தி-தி காலை 6.05 க்கு முழங்காவில் மாவீரர் கலையரங்குக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டு இலுப்பைக்கடவை, பள்ளமடு, ஆண்டான்குளம், காத்தான்குளம், 9-ம் கட்டை, முருங்கன், மடுறோட் மடு பரப்புக்கடந்தான் வழியாக ஆண்டான் குளம் பாடசாலை முன்னால் முற்பகல் 9.31க்கு போட்டி முடிவடைந்தபோது ஆரம்பத்திலிருந்தே முதலாவதாக ஓடி வந்த வி. கணேசமூர்த்தி (14 பி) ஆலங்கேணி, பூநகரி வீரர் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார் இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு 5 வீரர்கள் மிக நெருக்கமாக ஓடி வந்தபொழுது வன்னி ஐ வி. சபைப் போட்டியின் முதலாவது இடத்தைப் பெற்ற திரு. மாத்தையா மக்கள் நெருக்குதல் காரணமாக முடிவிடம் அடைவதற்கு 2 யார் தூரத்தில் சறுக்கி விழுந்து தனது வாய்ப்பை இழக்க நேரிட்டது. (எனினும் அவருக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது) 2-ம் இடத்தை நாகதாழ்வு பி. காளீஸ்வரனும், 3-ம் இடத்தை கல்மடு நா. மகேஸ்வரனும் பெற்றுக் கொண்டனர்.

1ம் இடத்தைப் பெற்ற பூநகரி வி. கணேசமூர்த்திக்கு லெப். நிதிநினைவு சுழல் தங்கக் கேடயம் வழங்கப்பட்டது.

பெண்கள் துவிச்சக்கர வண்டி ஓட்டம்(30மைல்)

12ந் தி-தி காலை 7.00 மணிக்கு மடு கோவில் முன்பாக ஆரம்பமாகி மடுறோட், முருங்கன் 9ம் கட்டை, கறுக்காய்க்குளம் வழியாக ஆண்டான்குளத்தில் முடிவடைந்த இப்போட்டியில் பல பெண் முன்னணிப்போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் 1ம் இடத்தை அடம்பன் ம. ம. வி. மாணவி மேரி ஜேசப்பினும், 2ம் இடத்தை பாலமோட்டையைச் சேர்ந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

# மூன்று நாடுகளுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி

## இந்தியா வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது

கடந்த 5ம் திகதி இந்தியாவின் கல்கத்தா ''ஈடன் கார்டனில்'' நடைபெற்ற மூன்று நாடுகள் பங்கு கொண்ட சர்வதேச கிரிக்கட் கோப்பையை இந்தியா தனதாக்கிக் கொண்டது. இப்போட்டியில் இந்தியா மேற்கு இந்தியா அணியை 72 ஓட்டங்கள்வித்தியாசத்தில் வெற்றிகண்டது.

கடந்த வருடம் நடைபெற்ற ஹீரோ' கிண்ணத்தையும் இந்தியா தனதாக்கியது தெரிந்ததே. தொடர்ந்து இலங்கையில் நடைபெற்ற ''சிங்கர் கிண்ணத்தையும் இந்தியா தனதாக்கியதைத் தொடர்ந்து இக் கிண்ணத்தையும் பெற்றதன் மூலம் இந்திய அணி தனது பலத்தை சர்வதேச ரீதியில் மீண்டும் நிரூபித்துள்ளது. இந்திய அணி இனிவரும் காலங்களில் மற்றைய அணிகளுக்கு ஓர் சவாலாக அமையும் என்பது அவதானிகள் கருத்து இந்திய அணி ஓர் இளம் அணி என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று நாடுகளான இந்தியா, மேற்கு இந்தியா, நியூசிலாந்து ஆகியன இப்போட்டிகளில் பங்குபற்றின. இத்தொடரில் கபில் தேவ் பங்கு பற்றாமை குறிப்பிடத்தக்கது தொடர்ந்து மனோச் பிரபாகர், நாயன் மொங்கியா ஆகியோரின் ''தனக்காக விளையாடும்'' ஆட்டம் காரணமாக அவர்கள் இச்சுற்றுப் போட்டியில் இருந்து விலக்கப்பட்டதாக இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது. இத்தொடரின் மூன்று ஆட்டங்களிலும் மனோச் பிரபாகர் சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் இந்தியா நான்கு போட்டிகளில் மூன்று வெற்றிகளையும், மேற்கு இந்தியா நான்கு போட்டிகளில் இரு வெற்றிகளையும் ஒரு சமநிலையையும் பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இத் தொடரின் இறுதியாட்டம் கடந்த 5ம் திகதி இந்தியாவின் பிரசித்திபெற்ற நகரான கல்கத்தாவின் ஈடன் கார்டனில்நடைபெற்றது இப்போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெற்றது. ஆட்டம் பிற்பகல் 2.40 மணியளவில் ஆரம்பமானது. பூவா தலையாவில் வெற்றிகண்ட இந்திய அணித்தலைவர் மொகமட் அசாருதீன் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். மனோச் பிரபாகர், மொங்கியா ஆகியோரது இடங்களிற்கு அதுல் படேடகவும், விஜய்யாதவும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்திய அணியின் ஆரம்பதுடுப்பாட்ட வீரர்களாக இந்திய இளம் புலி சச்சின் தெண்டுல்கரும், வளரும் ஓர் ஆரம்ப துடுப்பாட்டவீரர் அஜே ஜடேஜாவும் களத்தில் இறங்கினர். தொடக்கத்தில் இருந்தே சச்சின் தெண்டுல்கர் படுவேகமாக ஓட்டங்களைச் சேர்க்கத்தொடங்கினார் இவர் கஃபீலின் நான்காவது ஓவரில் இரு பவுண்டரிகள் விளாசியதும்


### மனோரஞ்சன் சஞ்ஜீவன்

மேற்கு இந்திய ஆரம்பபந்து வீச்சாளர்களை திண்டாட வைத்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஒன்பதாவது ஓவரில் அறிமுகப்படுத்தப்பட்ட அன்ரூஷ் கமின்ஸின் ஓவரில் மூன்று 3 பவுண்டரிகள் உட்பட 14 ஓட்டங்களைச் சேகரித்து மைதான விளையாட்டரங்கில் குழுமியிருந்த 90,000 கிரிக்கட் ரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்தியது இவரிற்கு துணையாக அஜேஜடேஜாவும் நிதானமாகவும விரைவாகவும் ஆடினார் சச்சின் 13 ஓவரில் கூப்பரின் பந்து வீச்சில் பெற்ற இரண்டு ஓட்டங்களுடன் தனது 50 ஓட்டங்களை பூர்த்தி செய்தார் இதில் ஆறு நான்குகள் அடங்கும் இது இவரது 19 ஆவது அரைசதம் ஆகும். இந்திய அணி தனது 21வது ஓவரில் நூறு ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. தொடர்ந்து விளையாடிய தெண்டுல்கர் 23 ஆவது ஓவரில் கஃபீ வீசிய பந்தை மிட்-ஒன் திசையில் அடிக்க முனைந்து வில்லியம்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் இவர் 66 ஓட்டங்களை 69 பந்து வீச்சில 9 நான்குகளுடன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து ஆடவந்த சித்து தொடக்கத்தில் சற்று மந்தமாகஓட்டங்களைச்சேகரிக்கத் தொடங்கினர் இந்திய அணியின் 33 ஓவரில் அஜேஜடேஜா தன்ராஜின்பந்துவீச்சில் லாராவிடம் பிடிகொடுத்து 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 98 பந்துகளைச் சந்தித்து நான்கு பவுண்டரிகள் ஓர் ஆறு உட்பட்ட 58 ஓட்டங்களைப் பெற்றார் அணியின் 37-வது ஓவரில்சித்துகமின்ஸின் பந்தை அடிக்கமுனைந்துவிக்கட்கீப்பர் அடம்ஸ்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் இவர் 50 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றார். இதில் ஓர் நான்கும், ஓர் ஆறும் அடங்கும். சித்து ஆட்டம் இழக்கும் போது இந்திய அணி 3 இலக்குகள் இழப்பிற்கு 175 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்த ஜோடி சேர்ந்த அசாரும்,வினோத் காம்ளியும் துரிதமாக ஓட்டங்களை சேகரித்தனர். அசார் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் காம்ளி 44 பந்துகளில் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களைப் பெற்றார். கூம்பிளே துரிதமாகப்பெற்ற மூன்று பவுண்டரிகளுடன் இந்திய அணி மொத்தம் 274 ஓட்டங்களை 50 ஓவரில் பெற்றது. பந்து வீச்சில் ரவீந்திர தன்ராஜ் இரு விக்கட்டையும், கமின்ஸ் கஃபீ கூப்பர் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்திய அணியின் இத்தொடரில் ரிச்கி ரிச்சாட்சன்அம்புறோஸ்டெஸ்மன் ஹென்யிஸ் பென்ஜமின் ஆகியோர் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது 275 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற ரீதியில் ஆரம்ப ஆட்டக்காரர்களாககளம் புகுந்த பில் சிமன்ஸ், வில்லியம்ஸ் ஆகியோரும் சராசரியாக ஓட்டங்களைச் சேகரித்தபோது துரதிர்ஷ்ட வசமாகவில்லியம்ஸ்29ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார். மிகுந்த எதிர்பார்ப்புடன் களத்தில் ஆடவந்த பிறைன் லாரா ஓர் ஓட்டத்துடன் வெங்கிட் பிரசாத்தின் பந்தில்ஆட்டமிழந்தது மேற்கு இந்திய அணியை இக்கட்டான நிலைக்குத் தள்ளியது தொடர்ந்து இலக்குகள் சரிய ஆரம்பித்தது சிமன்ஸ் 21 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையிலும், ஆத்தர்டன் 44 ஓட்டங்களுடனும் கடந்தபோட்டியில் இந்தியர்க் கெதிராக 111 ஓட்டங்கள் பெற்ற கார்ல் கூப்பர் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர் இந்தியாவின் வெற்றி நிச்சயப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 8 இலக்குகள் சரிய களம் புகுந்த மேற்கு இந்திய அணித் தலைவர் கோட்னி வோல்ஷ் வெங்கடபதி ராஜீவின் பந்து வீச்சிற்கு தொடர்ந்து 6:6;4 ஓட்டங்களைப் பெற்று ராஜீவின் 54-வது பந்தில் ஆட்டமிழந்தார். வோல்ஷ் பெற்ற 30 ஓட்டங்களில் மூன்று சிக்சர்களும் இரண்டு பவுண்டரிகளும் அடங்கும் தொடர்ந்து கஃபீ ராஜீவின் 6-வது பந்தில் ஆட்டமிழக்க அரங்கத்தில் உள்ள ரசிகர்கள் மைதானத்துள் படையெடுத்தனர். இந்திய அணி தனது பலத்தை மீண்டும் காண்பித்தது இந்திய தரப்பில் ராஜீ 4 விக்கட்டையும் கூம்பிளே வெங்கடபிரசாத் தெண்டுல்கர் சிறீநாத் ஆகியோர் தலா ஓர்விக்கட்டையும் கைப்பற்றினர். மேற்கு இந்தியா44.3 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 202 ஓட்டங்களை மட்டும் சேகரித்தது.

இவ்வாட்டத்தின் நாயகனாகவும் இத்தொடரின் நாயகனாகவும் இந்திய அணியின் இளம் வீரர் சச்சின் தெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டார். இவர் இத்தொடரில் 8, 115, 34, 62, 66 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் ஒரு நாள் போட்டிகளில் ஒரு வலு நிறைந்த சக்தியாக இந்தியா தன்னை இனங்காட்டியுள்ளதுடன்தொடர்ந்தும் மேனிலையைப் பேணவும் முயற்சிக்கும் என்று கூறலாம்.



ஒருநாள் சர்வதேச கிரிக்கட் போட்டி

# சிறிலங்காவிற்கு வாய்ப்பாக அமைந்த சிம்பாப்பேயுடனான போட்டித் தொடர்

சிறிலங்காவிற்கு சிம்பாப்பேயுடனான டெஸ்ட்தொடர் வாய்ப்பாக அமையாவிட்டாலும் ஒரு நாள் சர்வதேசப் போட்டித்தொடர் திருப்தியாகவே அமைந்துவிட்டது. ஹராரேயில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் முதலில துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 5 இலக்கு இழப்பிற்கு 256 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. குறிப்பாக சர்வதேசத்தரம் வாய்ந்தவரெனக் கருதப்படும் றொசான் மகாநாம ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வந்து தமது 100 வது ஒரு நாள் ஆட்டத்தில் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். சஞ்சீவ றணதுங்கதொடராக குறிப்பிடத்தக்க ஓட்டங்களைப் பெற்று வருபவர். இங்கு 51 ஓட்டங்களையும் அரவிந்த டிசில்வா 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பதிலளித்து ஆடிய சிம்பாப்பே 48.1 ஓவர்களில் 200 ஓட்டங்களைமட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. அன்டி பினவர் 61 ஓட்டங்களையும் வலர் 40 ஓட்டங்களையும் பெற்றனர் 5 வது இலக்கு 71ல் விழவே அதன்பின் வந்தவர் 2 குறைஞ்சிய ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது சமிந்த வாஸ் 4 இலக்குகளைப் பெற்றுக் கொண்டார். சிறிலங்கா 56 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் இம் மூன்று ஆட்டத் தொடரில் மிகவும் விறுவிறுப்பாக அமைந்த ஆட்டமாகும். முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்பே தம்மை மிகச் சிறப்பாக நிரூபித்தனர் பின் தமக்கொதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 290 ஓட்டங்களை 5 இலக்கு இழப்பிற்கு சிம்பாம்பே அணியினர் குவித்தார்கள். இதில் கம்பெல் பெற்ற 131 ஓட்டங்கள் அச்சாணியாக அமைந்ததோடு அவரது முதலாவது ஒரு நாள் சதமாகவும் அமைந்தது. அணித்தலைவர் அன்டி. பிளவர் தன் பங்கிற்கு 76 ஓட்டங்களைக்குவித்தார்: றண் அவுட் ஒன்றைத்தவிர வீழ்ந்த 4 இலக்குகளில மூன்றை வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் வீழ்த்தினார்.

ஆனால் சிறிலங்கா இப்பெருந் தொகையைப் பற்றிப் பெரிது படுத்தியதாகத் தெரியவில்லை. மிக நம்பிக்கையுடன் ஆட்டத்தை ஆரம்பித்த சிறிலங்கா 3 இலக்குகளை இழந்திருக்கும் போது 233 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்கள். இருந்தும் 6 இலக்குகள் விழ்ந்த போது 245 லேயேநின்றனர். ஆனால் ஒரு புறம் அரவிந்தடீசில்வா அரணாக நின்று 97 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். இருந்தும்சிம்பாப்பேதம் திறமையால் 8 இலக்குகளை வீழ்த்தி இறுதியாக ஓவர்கள் முடிவடையும் போது 288 ஓட்டங்ளுக்கு மேல் சிறிலங்காவைச் செல்ல விடவில்லை றொசான் மகாநாம தொடராக இப்போட்டியிலும் 106 ஓட்டங்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது சிம்பாப்பே ஒரு மகத்தான 2 ரண்வெற்றியைபெற்றுக் கொண்டது.

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி இருவருக்குமே முக்கியமானது. ஏற்கனவே 1-1என்ற நிலையில் இருந்த இருவருக்கும் இதனை வெல்லுதல் மிக கடினமாயிற்று ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 3 இலக்குகளை 106க்கு இழந்திருந்தபோது நான்காவது சோடியாக அரவிந்தவுடன் இணைந்த அணித்தலைவர் அர்ஜுன அதிரடியாக 85 ஓட்டங்களைப் பெற்றார் அரவிந்தவும் இவரும் சேர்ந்து 143 ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் அணித்தலைவர் ஆட்டமிமிழந்ததும் அரவிந்த 107ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டார். சிறிலங்கா மொத்த ஓட்ட எண்ணிக்கை 50 ஓவர்களில் 266/4 ஆக அமைந்தது. ஆனால் இரண்டாவது ஒரு நாள் போட்டியில் சிறிலங்கா காட்டிய ஆக்ரோஷத்தைச் சிம்பாப்பே காட்டத் தவறிவிட்டது. 48.1 ஓவர்களில் 9 இலக்குகளுக்கு 106 ஓட்டங்களை மட்டும் பெறமுடிந்தது ஒரு சிராக1ஓட்டத்தில இருந்து 106 ஓட்டங்கள் வரை மளமளவெனச் சரிந்தன. புஸ்பகுமார 3, வாஸ் 2, விக்கிரமசிங்க, முரளிதரன் தலா 1 என்றவாறு இலக்குகளைப் பெற்றுக் கொண்டனர். இவ்வகையில் ஒருநாள் சர்வதேசப் போட்டித்தொடரை சிறிலங்கா தனதாக்கிக் கொண்டது. சிம்பாப்பே சிறிலங்கா ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டித்தொடர் சிறிலங்காவிற்கு தாயகத்துக்கு வெளியே பதிவு செய்து கொண்ட முதலாவது சுற்றுப்போட்டி வெற்றித்தொடராக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா சார்பில் அரவிந்த டிசில்வா, சமிந்தவாஸ் (9 இலக்கு) இருவரும் துடுப்பாட்டம், பந்து வீச்சுச்சராசரிகளில் முதன்மைபெற, சிம்பாப்பே சார்பில் ஏ. கம்பெல் ஜீ விட்டோல் (6 இலக்கு) இருவரும் துடுப்பாட்டம், பந்துவீச்சில் முதன்மைச் சராசரியைப் பெறுகிறார்கள் எனினும் தனிநபர் எண்ணிக்கை என்ற வகையில் றொசான் மகாநாம 267 ஓட்டங்களுடன் முதன்மைபெற அன்டிபிளவர் சிம்பாப்பே சார்பில் 145 ஓட்டங்களுடன் முதன்மை பெறுகின்றார்.

# ஹபரணை கப்பலை உடனடியாகதிரும்பபணிப்பு

## வழக்கு நடைபெற்று வருகிறதாம்

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது பருத்தித்துறையில் பொருட்களை இறக்கிக்கொண்டிருக்கும் ஹபரணை கப்பலை 21ம் திகதி கொழும்பில் நிற்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கொழும்பில இருந்து அத்தியாவசிய சேவை ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்: கடந்த சில வாரங்களிற்கு முன்பு ஹபரணை கப்பல் கொழும்பு துறைமுகத்தில் விபத்திற்குள்ளானது தெரிந்ததே.

இதனால் துறைமுகத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கு கப்பல் கம்பனியிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது இந்த வழக்கின் விசாரணை தொடர்பாக ஹபரணை கப்பலை வரும் 21ம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நிற்குமாறும் இதற்கேற்ற விதத்தில் கப்பலை வடபகுதியிலிருந்து அனுப்பி வைக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமிருந்து யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிப்புரை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## சிறப்புற

இ. மாலினியும் 3ம் இடத்தை நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த ஆர். அனெற்றா மரிய நாயகியும் பெற்றனர். 1ம் இடத்தைப்பெற்ற மேரி ஜேசப்பினுக்கு 2ம் லெப். ரோம் நினைவு சுழல் தங்கக் கேடயம் வழங்கப்பட்டது.

**வீதி ஓட்டம் - ஆண்கள் (20 மைல்)**

12ந் திகதி காலை 7.15 மணிக்கு மாதா கிராமம் சந்தியில் ஆரம்பமானஇப்போட்டி மடுறோட், முருங்கன் 9ம் கட்டை, கறுக்காய்குளம், வழியாக ஆண்டான்குளம் சந்தியில் முடிவடைந்தது. (நேரம் 9.35) முதலாவது இடததை வே. சிவநேசன் (227) வட்டக்கச்சி, கிளிநொச்சி, 2ம் இடத்தை வீ. சந்திரகுமார், (228) வட்டக்கச்சி, கிளிநொச்சி, 3ம் இடத்தை பெ. ஞானசீலன் (224 நொச்சிமோட்டை ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 60 க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் இப்போட்டியில்கலந்துகொண்டனர். 1ம் இடத்தைப்பெற்ற வே. சிவநேசனுக்கு லெப். கேணல் வேணு நினைவு சுழல் தங்கக் கேடயம் வழங்கப்பட்டது. இப்போட்டித் தூரத்தை ஓடிக் கடந்த வயதில் மிகக்குறைந்த போட்டியாளர்களான வெ. நிக்சன், பொன்திவு கண்டல், பெ. விக்னேஸ்வரன் ,சின்னப்பட்டிவிரிச்சான் ஆகியோருக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**வீதி ஓட்டம் - பெண்கள் (08 மைல்)**

குறைந்தளவு போட்டியாளர்கள் இவ்வோட்டப்போட்டியில் கலந்து கொண்டாலும், போட்டி சிறப்பாக அமைந்திருந்தது. 12ந் திகதி காலை 8.19க்கு போட்டி செம்பன்திவு அம்மன் கோவில் முன்பாக ஆரம்பித்து ஒம் கட்டை கறுக்காய் குளம் வழியாக ஆண்டான்குளம் சந்தியில் முடிவடைந்த போது நேரம் 9.20 ஆகும் 1ம் இடம் க. றெஜினா (495), முருங்கன், 2ம் இடம் ச.ஜெனிற்றா(497) இத்திக்கண்டல், 3ம் இடம் சு. விஜயா (496)) முள்ளிக்குளம், ஆகியோர் பெற்றனர்.

1ம் இடத்தைப் பெற்ற க. றெஜினாவுக்கு மேஜர் அசோக் நினைவு சுழல் தங்கக் கேடயம் வழங்கப்பட்டது.

வீதி ஓட்டம், து.வண்டி ஓட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கும் மைதானப் போட்டிகளில் இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்ட அணிகளுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் (மன்னார் மாவட்டம்) சிறந்த முறையில் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட இப் பெருவிளையாட்டு விழாவுக்கு மன்னார் விளையாட்டு கழகங்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தது இப்போட்டிகளுக்கு யாழ். கால்பந்தாட்ட நடுவர் சங்கத்தினர், கிளிநொச்சி கால்பந்தாட்ட நடுவர் சங்கம், மன்னார் பெருநிலப்பரப்பு பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியைகள் விளையாட்டு அதிகாரிகள், (நானாட்டான், அடம்பன்) ஆகியோர் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தித் துறைக்குப் பக்கத் துணையாக நின்று உதவி புரிந்தனர். மொத்தத்தில் வன்னி முல்லை, மன்னார் மக்களோடு தமிழீழ மக்களும் மனம் மகிழத் தக்க விளையாட்டு விழாவாக நிறைவு பெற்றது இப் பெரு விளையாட்டு.

'ஓங்குகவே தமிழர்தம் விளையாட்டுத் திறன்உலகெல்லாம்'

மாவட்ட விளையாட்டு அபிவிருத்தித் துறை
**மன்னார் மாவட்டம்.**

## சென். கென்றீஸ்

லாவது கோலை போட்டார் இதில் சிறப்பு என்னவென்றால் பிற்காப்பு நிலையில் ஆடும் இவர் மிகவும் முன்னேறிச் சென்று கோல் போட்டதாகும்.

இதன்பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது ஞானமுருகன் அணியினர் மிகவும் வேகமாக முன்னேறி கோல் போடமுயன்ற போதும் சென் கென்றீஸ் அணி கோல்காப்பு வீரர் அவற்றை மிகவும் சாதுரியமாக தடுத்துக் கொண்டிருந்தார் ஆட்டம் முடிவடையும் வரை ஞானமுருகன் அணியினர் பக்கம் விளையாட்டு சார்ந்திருந்த போதும் மேலதிக கோல் எதுவும் போடாததால் 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் சென் கென்றீஸ் அணியினரிடம் தோல்வி கண்டனர்.

இடை இடையே பெய்த மழையையும் பொருட்படுத்தாமல் ரசிகர்கள் ஆட்டத்தை கண்டு களித்தனர். இந்த ஆட்டம் இறுதி பத்து நிமிடங்கள் ரசிகர்களை பெரும் பரபரப்புக்குள் ளாக்கி விட்ட ஆட்டமாகும்.

மேலும் உதைபந்தாட்ட மத்தியஸ்தம் மிகவும் கடினமானதெயன்றாகும் நடுவர்கள் தமது கடமையை சரிவரச்செய்த போதிலும் சில சந்தர்ப்பங்களில்எதிர்பாராத தவறுகள் நடந்து விடுவதுமுண்டு. இனிவரும் காலங்களில் எந்த ஒரு அணியையும் பாதிக்காத வகையில் சிறந்த முறையில் நடுவர்கள் மத்தியஸ்தம் வகிப்பார்கள் என ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள் இந்தவகையில் இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்த மத்தியஸ்தர் விமலதாசன், உதவி மத்தியஸ்தர் தம்பிநாயகம், தேவராஜ் மூவரும் ரசிகர்களை திருப்திப்படுத்தும் வகையில் சிறப்பாக கடமையாற்றியிருந்சனர்

மேலும் இப்போட்டித்தொடரில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின்படி அணிகள் பெற்ற புள்ளிகள் விபரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பாடும்மீன் | - 3 | போட்டிகள் | ஆடி | - 06 | புள்ளிகள் |
| சென்மேரிஸ் | - 5 | ,, | ,, | - 06 | ,, |
| சென் அன்ரனிஸ் | 5 | ,, | ,, | - 06 | ,, |
| சென் கென்றீஸ் | 6 | ,, | ,, | - 07 | ,, |
| சென் நிக்கிலஸ் | 7 | ,, | ,, | - 04 | ,, |
| ஞானமுருகன் | 5 | ,, | ,, | - 03 | ,, |
| றோயல் | 4 | ,, | ,, | - 05 | ,, |
| ஸ்கந்தா | 5 | ,, | ,, | - 01 | ,, |


வாசிக்கிறேன்
கவிஞனாகிறேன்!

**கவிதை**

இளங்கவிஞர்களுக்கான இதழ்

[10137]



உ
சிவமயம்

**திருமண அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் (20-11-94) ஞாயிற்றுக்கிழமை மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை அமைந்துள்ள சுப முகூர்த்த வேளையில்

எங்கள் புத்திரன்
திருநிறைச் செல்வன்
**இராஜேந்திரம்**
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறைச்செல்வி
**இந்துமதி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு இலண்டன் உயர்வாசற் குன்று முருகன் ஆலய திருமண மண்டபத்தில் திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். இத்திருமண வைபவத்தை சிறிலங்காவில் உள்ள உற்றார் உறவினர்களுக்கு இரு வீட்டாரும் தெரியப்படுத்துகின்றனர்.

Mr. & Mrs. Balachandran
7, Colwood Gardens,
Colliers Wood,
London SW19 2DS.
Tel: 081-2448435.

Mr. & Mrs. Venasithamby
(Retd, Accountant)
59, Raymead Avenue,
Thornton Heath,
Surrey CR7 7SB.
Tel: 081-6847900

Mr. L. Mathialagan (Bride's brother, Canada)

திரு. திருமதி செல்வமாணிக்கம்
'ஜனா இல்லம்'
நிற்கொழு, ஊரிக்காடு.
வல்வெட்டித்துறை.

திரு.திருமதி லோகநாதன்
(முகாமையாளர், மக்கள்வங்கி, பருத்தித்துறை)
செட்டித் தெரு,
பருத்தித்துறை.

(9857)

## சிந்தனைக்கு

முடிவு செய்ய நேரம் எடுப்பவன்
ஆயத்தம் செய்வதற்கு எச்சரிக்கை தருகிறான்.
- பிரான்ஸிஸ் குவார்ல்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20- 11 -1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## குழப்பம்

இனப்பிரச்சினைக்கான சமாதான ரீதியிலான தீர்வுகளை முன்னெடுப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் குழப்பம் அடைந்திருப்பதாகவும், அரசாங்கம் முன்னர் இனப்பிரச்சினை தொடர்பாக வகுத்த யுத்திகளை மறுபரிசீலனை செய்து வருவதாகவும், பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் விமர்சிக்கின்றார்.

இவ் விமர்சனத்திற்கு ஏற்றாற்போன்றே அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் உள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கம் நல்லெண்ண சமிக்கையாக கடைப்பிடித்த போர் இடைநிறுத்தத்தை அரசாங்கம் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கவில்லை. அத்தோடு இராணுவம் தமது நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதி அளித்துள்ளது.

தேர்தல் முடியும்வரையும் இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு பற்றி தினமும் பேசி வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பதவி ஏற்பு வைபவம் முடிந்ததும் அது குறித்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டுள்ளது போல தெரிகிறது. இதே சமயம் ஒரிரு அமைச்சர்கள் இது குறித்துப் பேசினாலும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி அவர்களால் எதுவும் தெளிவுபடக் கூறப்படுவதாக இல்லை.

அரசாங்கத்தின் இக்குழப்பத்திற்கும், பின்வாங்கல்களுக்கும் காமினி திசாநாயக்காவின் கொலையை தொடர்புபடுத்த சிலர் முனைகின்றார்கள். காமினி திசாநாயக்காவின் கொலையை விடுதலைப் புலிகள் இயக்கமே புரிந்தது என்ற சந்தேகம் நிலவுவதால் பேச்சுவார்த்தையைத் தொடர்வது பற்றி அரசாங்கம் தயக்கம் காட்டுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இது எந்தளவிற்கு ஏற்புடைய வாதமாகும்? அவ்வாறு அது ஏற்புடையதாகக் கொள்ளப்படுமானால் முன்னைய ஐ.தே.க அரசாங்கத்திற்கும், தற்போதைய பொ.ஐ.மு அரசாங்கத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன? முன்னரும் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்தாலோ, அரசியற் தலைவர்கள் யாரும் கொல்லப்பட்டாலோ அதற்கான பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்திவிட்டு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விடுவதே ஐ.தே.கவின் பாணியாக இருந்தது. ஆனால் இவற்றைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதை ஒரு போதும் முன்னைய அரசாங்கத்தால் நிரூபிக்க முடியவில்லை.

இதையொத்ததொரு நிலையையே தற்பொழுது பொ.ஐ. முன்னணியும் கொண்டிருப்பது போல் உள்ளது. இல்லாதுபோனால் காமினி திசநாயக்காவின் கொலைக்கு யார் பொறுப்பு என்று புலனாய்வுத்துறையினர் எதையும் கண்டறியமுடியாத நிலையில் தவித்துக்கொண்டிருக்கையில், அதாவது தற்கொலைப்படையாளி என அவர்கள் கருதிய பெண்ணை உயிருடன் அவர்கள் முன்வந்து நிற்கையில், ஏன் விடுதலைப் புலிகள்தான் பொறுப்பு என்ற ரீதியில் பேச்சுவார்த்தையைத் தாமதப் படுத்தவும் பேச்சுவார்த்தை தொடர்பான யுத்திகளை மறுபரிசீலனை செய்யவும் வேண்டும்?

மேலும் காமினி திசநாயக்காவின் கொலையுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்திப் பேசுவதென்பது அவர் கொல்லப்பட்டவுடனேயே எழுந்த குற்றச்சாட்டாகும் அதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே இடம் பெற்றதாகும். ஆயினும் தேர்தலில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஆதரவாகவே மக்கள் வாக்களித்துள்ளனர்

இந்த வகையில் காமினி திசநாயக்காவை விடுதலைப் புலிகள் கொன்றதாக ஒரு பேச்சிற்குத்தானும் வைத்துக் கொண்டாலும், கூட இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதையும், அதன்மூலம் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்று காணப்படுவதையும் மக்கள் விரும்புகின்றனர் என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. அதாவது காமினியின் கொலை, என்பதைவிட சமாதானப் பேச்சிற்கே மக்கள் முன்னுரிமை அளித்துள்ளார்கள்

இந்நிலையில் புதிய அரசாங்கம் சமாதானத் தீர்வு தொடர்பான முயற்சிகளில் தாமதம் காட்டுவது ஏன்? தேர்தலில் வெற்றி பெற்றாகி விட்டது தற்போதைக்கு மக்களை நெருங்கவேண்டிய அவசியதேவை இல்லை. என்ற எண்ணமா? அல்லது சமாதானத்தின் மீதுள்ள பற்று என்பதைவிட மேலோங்கிவிட்ட பேரினவாதச் சிந்தனையா? இல்லாது போனால் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களுக்கு எதிராக வெளியில் எங்கிருந்தாவது ஏற்பட்ட அழுத்தமா?

இதில் எதுவாக இருப்பினும், புதிய அரசாங்கம் கடந்த ஒருவாரகாலமாக கைக்கொள்ளும் நடவடிக்கைகள் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்விற்கு அவ்வளவு ஏற்புடையவையாக இல்லை என்றே கூற வேண்டும். இதே வழியை அரசாங்கம் தொடர்ந்தால் அது சமாதானத்திற்கு உதவாது என்பது மட்டுமல்ல, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நம்பி வாக்களித்த சுமார் 47லட்சம் வாக்காளருக்கு அவர்துரோகம் இழைத்ததாக அமையும்;

# தலைவரின் சிந்தனைகளை நிறைவேற்ற துறைசார் வல்லுனர் ஒத்துழைப்பு தேவை

### ஆய்வுப்பட்டறை இறுதி அமர்வில் தமிழீழ அரசியல்துறை துணைபொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இன்று ஒட்டுமொத்தமாக தமிழீழம் என்ற ஓர் இடத்தை மையமாக வைத்து எமது அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த இந்த இடங்களில் தான் குடியிருப்புகள், நகர அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை இனங் கண்டிருக்கின்றனர்; இத்திட்டங்களை நிச்சயமாக நாங்கள் நடைமுறைப் படுத்த வேண்டும். இனம் கண்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக மீண்டும் ஆராயப்பட்டு இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் இதை நடைமுறைப் படுத்துவதற்கான சிக்கல் என்ன இருக்கிறது என்பதை நாம் மீள ஆராய வேண்டும். இவ்வாறு தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங் காணல் என்ற ஆய்வுப்பட்டறையின் இறுதி அமர்வில் ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்,

அனர்த்தங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை இனங் காணும் ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்டு தமிழீழத்தின் பொருளாதார உட்கட்டுமான அபிவிருத்தியை செயற்படுத்த வேண்டுமென்ற அயராத எழுச்சியோடு அனைவரும் இந்த நிகழ்விலே கலந்து கொண்டு அரிய பல கருத்துக்களை எடுத்து விளக்கியுள்ளார்கள். தமிழீழம் இப்படித்தான் அமைய வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பிலே பொருத்தமான செயல் திட்டங்களை மலரப்போகும் தமிழீழத்தில் வளருகின்ற பிள்ளைகள் எதிர்கால குடிப்பரம்பல்கள் எவ்வாறு இந்த தமிழீழத்தில் வாழ வேண்டும். இன்னொரு இனத்திற்கு அடிமைப்பட்டோ இன்னொரு பொருளாதாரகடைக்கு உட்பட்டோ அல்லுறக் கூடாது என்பதற்காக இந்த பரம்பரையில் நாம் திட்டமிட்டு இந்த நாட்டினுடைய மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்கான ஒரு அடிப்படை எண்ணத் தோடும் எதிர்கால சிந்தனையோடு செயற்படுவதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த தமிழீழம் எப்படி அமைய வேண்டும் என்பதில் பலருக்கும் பலவிதமான கற்பனை உண்டு எங்கள் தேசிய தலைவர் அவர்கட்கும் பல விதமான எண்ணங்கள் சிந்தனைகளோடும் தமிழீழம் எப்படி அமைய வேண்டுமென்ற எதிர்பார்ப்போடும் இருக்கின்றார்

எங்கள் தமிழீழ தேசியத் தலைவரின் எண்ணத்தையும் நிறைவேற்றுவதற்கு எங்கள் துறைசார் வல்லுனர்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்குமாக இருந்தால் நிச்சயம் நாங்கள் அத்தகைய ஒரு நாட்டை கட்டி யெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. எங்களுக்கு மிகுந்த ஆற்றலுள்ள ஒரு தேசியத் தலைவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம் தலைவரும் இப்படித்தான் ஒவ்வொன்றாக சிந்தனை செய்து தன்னை வளர்த்துக் கொண்டவர்

உங்களுக்குத் தெரியும் ஆனையிறவுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கப்பல் மூலம் துருப்புக்களை இறக்கி அந்தப் போரை முறியடித்த சிறிலங்கா இராணுவத்திற்கு ஒரு சவால் விடுத்திருந்தார். இந்த கடற்படையினரின் கடல் ஆதிக்கத்தை முறியடிப்பேன் என்று மூன்று ஆண்டுகளுக்குள் கடற்படையை ஒரு மிகப் பெரிய வளர்ச்சி கண்ட படையணியாக மாற்றியமைத்து இன்று கடற்படைக்கு அதிவேக விரைவு படகுகளையும் சிங்கள இராணுவத்திடமிருந்து அவர்களுடைய கடற்படை தளங்களை அழித்து கைப்பற்றியதை நீங்கள் நேரடியாகவே பார்த்திருக்கின்றீர்கள் அவ்வாறு அவர் தன்னுடைய சிந்தனைகள் ஒவ்வொன்றும் நியமாக செயற்படுத்தி காண்பித்திருக்கின்றார். இன்றும் இந்தப் போர் நடவடிக்கைகளில் முழுமையான கவனத்தை செலுத்தி எமது நாட்டை முழுமையாக பாதுகாப்புள்ள ஒரு நாடாக மாற்றியமைக்க வேண்டுமென்ற சிந்தனையோடும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார், அதே நேரத்தில் எங்களுடைய மக்களுடைய ஆதரவும் இந்த துறை சார் நிபுணத்துவம் பெற்றவர்களுடைய ஒத்துழைப்பும் இருக்குமாக இருந்தால் நிச்சயமாக நாம் எதிர்பார்க்கின்ற அந்த தமிழீழத்தை மாற்றியமைக்க முடியும்.

ஆராய்ந்து ஆக்க பூர்வமான செயல் திட்டங்களை வடிவமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளை நாங்கள் கொண்டு வர வேண்டும். இன்று நாம் ஒரு எதிர்பார்ப்போடு இந்த செயற் திட்டங்களை இனங்காணுகின்றோம். இன்றைய அரசாங்கம் ஒரு சமாதான பேச்சு வார்த்தையை நடாத்தியிருக்கின்றது. இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையை நாங்கள் எதிர்பார்த்து இருக்கின்றோம் எமது தலைவர் அவர்களும் இரத்தம் சிந்தாமல் எங்கள் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை கிடைக்குமாக இருந்தால் அதனை தாங்கள் பரிசீலிக்க தயாராக இருக்கின்றோம் என்று பகிரங்கமாகவே அறிக்கை விட்டதோடு ஆக்கமான பல நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளார்.

இன்று சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக பதவி ஏற்று இருக்கின்றார். பதவி ஏற்றதைத் தொடர்ந்து எங்கள் தேசியத் தலைவர் அவர்கள் ஒரு வார போர் ஓய்வு யுத்த நிறுத்தத்தை எங்களது விடுதலைப் புலி போராளிக்கு அறிவித்துக்கொடுத்திருந்தார் இந்த ஒவ்வொரு நடவடிக்கைகளும் நாங்கள் இந்த மக்களுடைய நிம்மதியான வாழ்க்கையை மையமாக வைத்து செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்று உலகம் மிக வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது கம்பியூட்டர் மயமாக உலக நாடுகள் முன்னேற்றமடைந்திருக்கின்ற நேரத்திலே இங்கு பலர் பேசினார்கள் நாங்கள் இருபது வருடங்கள் பின் தங்கிய நிலைக்கு சென்று விட்டோமென்று இருபதாம் நூற்றாண்டின் பின் இறுதிக்கட்டத்திற்கு வந்த பின்னும் நாங்கள் இன்னும் பழைய நிலைக்கு திரும்ப முடியாது ஆகவே புதிய யுகத்தை நோக்கி நாம் செல்ல வேண்டுமாக இருந்தால் அந்த நவீன யுகத்திற்கு ஈடு கொடுக்க் கூடிய புதிய முறைகளை நாம் அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாய தேவை எங்களுக்கு இருக்கின்றது இதனை எல்லோரும் நீங்கள் புரிந்திருக்கின்றீர்கள் அந்த அடிப்படையிலே தான் இந்த கருத்தரங்கிலும் கலந்து கொண்டிருக்கின்றீர்கள் ஆகவே நாங்கள் இதனை ஆக்க பூர்வமாக நடைமுறைப்படுத்தி காட்ட வேண்டும். அதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் திடசங்கர்ப்பம் பூணவேண்டும் இதனை நாங்கள் இந்த குழுநிலையிலே ஆராய்வு செய்வதோடு மட்டும் நின்று விடாது இந்த ஒவ்வொரு திட்டங்களையும் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதை நாம் நேரடியாகச்சென்று ஆய்வு செய்து அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் ஆகவே இங்கே கூறப்பட்ட கருத்துக்களை ஆக்கபூர்வமானதாக எடுத்துக் கொண்டு அதனை இந்த குடாநாட்டில் நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் எம்மிடமுள்ள ஆற்றலுள்ள சக்திகளை நாங்கள் முழுமையாக பயன்படுத்தி உணர்வு பூர்வமாக ஒவ்வொருவரும் ஒத்துழைத்து இந்த ஆய்வுப் பட்டறையை முழுமையான ஒரு பயனுள்ளதாக மாற்றுவதற்கு உங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பையும் கேட்டுக் கொள்வதோடு ஒவ்வொரு துறை சார்ந்த நிபுணர்களும் ஒவ்வொரு குழுக்களையும் நாம் அணைத்து இந்த வேலைத் திட்டங்களை நடை முறைப் படுத்துவதற்கு எங்களுடைய விடுதலைப் புலிகளுடைய அமைப்புகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்தி ஒரு முழுமையான திட்டத்தை நாங்கள் தயாரிக்க வேண்டும் என்றார்.

## புலிகளின் குரலுக்கு ஆயிரம் வாழ்த்துக்கள்

புதிய புதிய சரித்திரம் எழுதிடும்
புலிகளின் குரலாகியே எங்களின்
இதயமேறிய பிள்ளையே நீ பிறந் (து)
இன்றுடன் நான்காண்டுகள் ஆனதா?
அதிசயமிது. ஆம் சில ஆண்டினில்
அற்புதங்களைச் செய்தனை. இனிவரும்
உதயகாலங்கள் உந்தனுக் காகுக;
உலகமெங்கணும் உன்குரல் ஒங்குக.

காலைவந்து கதவினைத் தட்டியெம்
காதிலே ... வணக் கம்மெனச் சொல்லுவாய்.
மாலையில்வரு வாய்விளை யாடுவாய்
மலருமெம் நினை வோடுற வாடுவாய்
ஈழமெங்களின் இன்னுயி ரென்றுமே
இரவில் வந்தெமக் கானவை தந்துமே
வாழும் புலிகளின் குரலுக்கெம் ஆயிரம்
வாழ்த்துக்கள் இனிதாகவே வாழிய

களத்திலாடிடும் வேங்கையை, கனவுடன்
கல்லறைகளில் வாழும்மா வீரரை
பலத்துடன் வழி நடத்துமெம் காவியப்
பரணிபாடிடக் கூடிய தலைவனை
நிலத்தில் வாழிய என்று நீ வாழ்த்துவாய்
நின்னை வாழ்த்தியே நாம்கவி பாடுவோம்.
உளத்தினாலுனை வாழ்த்துறோம். வாழிய!
உரிமை தேடியுன் கரங்கள் உயருக.

- புதுவை இரத்தினதுரை.

## மாவீரர் எழுச்சி வார இறுதிநாள் நிகழ்வுகள்

மாவீரர் எழுச்சி வாரத்தின் இறுதி நாளான இன்று யாழ் குடாநாட்டில் வட்டாரீதியாக கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் சிரமதானப் பணிகளும் நடைபெறும் விபரம்:இன்றிரவு 7-30 மணிக்கு கோப்பாய் வட்டத்தில் உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடியிலும், உடுவில் வட்டத்தில் மாவீரர் முகாம், கந்தரோடை ஆலடிப் பிள்ளையார் கோவிலடி, புன்னாலை கட்டுவன் சந்தி பகுதிகளிலும் பளைவட்டத்தில் முகமாலை பொந்தடியிருப்பிலும் தீவக கோட்டத்தில் துரட்டிப்பனை குடியிருப்பிலும் பூதராசியிலும் மாவீரர் எழுச்சிவாரகூட்டமும் கலை நிகழ்வும் இடம் பெறும்.

சிரமதானம்

பளைவட்டத்தில் இத்தாவிலில் குணா அறிவகசூழல் துப்புரவு செய்யப்படும் சுழிபுரம் பாளாவெட்டி, மாவடிதுரட்டிப்பனை, மானிப்பாய் செல்லமுத்து அட்டகிரி குடியிருப்பு பகுதிகளில் துப்புரவு பணிகளும் வடிகால் செப்பனிடல் பணிகளும் இடம் பெறும்;

# கப்பலை திருப்பியனுப்ப அதிகாரிகள் அவகாசம்கோரல்

### பொருள் இறக்கும் பணி 22 இல் முடியும்

(யாழ்ப்பாணம்)

ஹபரணை கப்பலை கொழும்பிற்கு அனுப்பி வைக்குமாறு விடுத்த பணிப்புரையைத் அடுத்து யாழ் செயலக அதிகாரிகள் பொருட்கள் இறக்குவதற்கு கால அவகாசம் கோரியுள்ளனர்.

ஹபரணை கப்பலை 21 ம் திகதி கொழும்பில் நிற்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு அனுப்பிவைக்கப்பட்ட பணிப்புரையை அடுத்து அக்கப்பல் தற்பொழுது பருத்தித்துறையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருப்பதாகவும் இது வரும்22ம்திகதியேமுடியும்என்றும்பொருட்கள் இறக்கிமுடிந்ததும் கப்பலை கொழும்பிற்கு அனுப்பி வைப்பதற்கு கால அவகாசத்தை தந்துதவுமாறு செயலக அதிகாரிகள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் கோரியுள்ளனர்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது 22ம் திகதிக்கு முன்பாக கப்பலை அனுப்பிவைப்பதென்றால் ஒரு பகுதி பொருட்களுடனேயே அனுப்பி வைக்க நேரிடும் என்றும் தாங்கள் இது தொடர்பாக தமக்கு அறியத் தருமாறும் கேட்கப் பட்டுள்ளது;

இந் நெருக்கடிகளை அடுத்து கப்பலில் உள்ள பொருட்களை விரைவாக இறக்குவதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இச் செயற்பாடாக பிராந்திய சுகாதார பணிமனைக்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் பிரித்தானிய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மின்பிறப்பாக்கிகள் இறக்கும் பணி நேற்றுமுன்தினம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அத்துடன் கப்பல் கப்டன் யாழ் புனர்வாழ்வுப் பகுதிக்கு இவ்வாறு பணிப்புரை கிடைக்கப் பெற்றுள்ளது தொடர்பாகவும் வரும் 21 ம் திகதி கொழும்பில் நிற்கக் கூடியதாக வருவது சாத்தியமில்லை என்றும் பொருட்கள் இறக்க வேண்டியுள்ளது என்றும் தமது தலைமை காரியாலயத்திற்கு தகவல் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (இ) (தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 20**
**ஞாயிறு இரவு**

08. 01 - புலிகளின் குரல் வானொலியின் 4-ம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
08 30 - செய்திகள்
08. 40 - புலிகளின் குரல் வானொலியின் 4-ம் ஆண்டு நிறைவையொட்டி உருவான பாடல்கள்
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994. 11. 21**
**திங்கள் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - தமிழீழன் எழுதிய "உதயத்தமிழீழம் நல்க உயிர்கொடுத்த மாவீரர்"
08 00 - மணிமுதல்09 30 வரை மாவீரர் வார ஆரம்ப நாளையொட்டியும் தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வையொட்டியும் விசேட ஒலிபரப்பு.
09. 30 - மணிக்கு காலை ஒலிபரப்பு யாவும் நிறைவுபெறும்.

## வலிமேற்கு பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

வலிமேற்குப் பிரதேசத்தில் பலருக்கு வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த நோய்கள் பெரும்பாலும் தற்போது மழைகாலம் ஆனபடியால் கொசுக்கள், ஈ போன்றவற்றின் பெருக்கத்தினால்ஏற்படுகிறது எனவும், கூடியவரை மக்கள் சுகாதாரவழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். குடிநீரை சுட்டு ஆறிய நீராக பாவித்து வருவது சிறந்த தற்காப்பு முறையாகும் என மேலும் இவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தற்போது சுழிபுரம் மேற்கில் காய்ச்சல் வியாதியினாலும், சுழிபுரம் மத்தி, தொல்புரம் போன்ற பகுதிகளில் சில இடங்களில் காய்ச்சலுடன் வயிற்றோட்டமும்காணப்படுவதாக தெரியவருகிறது; (41)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கடற்புலி 2-ம் லெப். இசைவாணன்**
பரமசிவம் பத்மராஜன் (மாத்தான்)

தோற்றம் 16 . 4, 1973 — வீரச்சாவு 20 . 11 - 1992

அன்பிற்கும் பண்பிற்கும் இருப்பிடமாய் எம்முடன் பலகாலமாய் வாழ்ந்து கடற்புலி வீரனாய், விளையாட்டு வீரனாய் புகழ் பெற்று எம்மைவிட்டு பிரிந்த பத்மராஜன் ( மாத்தான் ) இசைவாணன் இவரின் பிரிவால் துயருறும் தாய் தந்தை சகோதரி, அன்ரி ஐயா, மாமா, மாமி, மைத்துனர், மருமக்கள்.

தகவல்
ப. சிங்கராஜா (சிறி]
குடும்பம் அத்தான்
லியோன் டிக்சன்
குடும்பம்
மைத்துனன்

25, சூரியவெளி,
நாவாந்துறை, (10147)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



2-ம் லெப். கடற்புலி காந்தருபன் (குலேந்திரன்)
**செல்வராசா தவநேசன் (கண்ணன்)**
2-ம் வட்டாரம், புங்குடுதீவு

பிறப்பு; 27. 10. 78 — வீரச்சாவு: 07. 10. 94

புங்கை நகர் தன்னில் வந்துதித்த வேங்கையே
மண்ணின் மானம் காத்த மறத்தமிழன் நீ
அன்பான கண்ணனே
உன்னை இழந்து தவிக்கின்றோம் நாங்களே

உழைப்போர் உரிமை கேட்டுப் போராடும் தினமாம் மே தினத்திலன்று பல்கலைக் கழக மைதானத்தில் கடற்புலி அணிவகுப்பில் நீ நின்று செய்த சாகசங்களைக் கண்டோம். ''காந்தா'' ஆனால் இன்றைய மே தினத்திலும் அப்படிச் செய்வாய் என்றிருந்தோம், ஆனால் இன்று நாங்கள் எதிர்பார்த்த கனவை நனவாக்குமுன் நீயும் இந்த மண்ணின் ஒரு மாவீரனாய் அமைந்துவிட்டாய் காந்தருபனே!!

இன்று (20-11-94) இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும், சக போராளிகளையும், உற்றார், உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடுப்பத்தினர்

478, கமக் வீதி,
யாழ்ப்பாணம். (10146)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஹபரணை கப்பல் விவகாரம்

# துறைமுக அதிகார சபை கப்பல் கம்பனி இழுபறி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் ஹபரணை கப்பல் மோதுண்டு ஏற்படுத்திய சேதவிவகாரம் தொடர்பாக, மேற்படி கப்பல் கம்பனிக்கும் துறைமுக அதிகார சபைக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது

இதனையடுத்து தற்சமயம் பருத்தித்துறையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் இக் கப்பலை உடனடியாக கொழும்பு துறைமுகத்துக்கு திரும்பி வருமாறு துறைமுக அதிகார சபை பணிப்பு விடுத்துள்ளது. இதே வேளை, பொருட்கள் அனைத்தையும் இறக்கிவிட்டே திரும்புமாறு கப்பல் கம்பனி, கப்பலின் கப்டனுக்கு அறிவித்துள்ளது.

கப்பல் மோதியது தொடர்பான விசாரணைகள் நாளை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி, கப்பலில் இருந்து பொருட்கள் அனைத்தையும் இறக்கிய பின்னரே கப்பலைக் கொழும்புக்கு திருப்பியனுப்புமாறு, புனர்வாழ்வு அமைச்சுக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. எனினும், இதற்கான தகுந்த பதிலெதுவும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை என தெரியவருகின்றது. [பா, தி]

## அரச ஊழியர் சம்பளம் தீர்மானிக்க கமிஷன்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுகள் பற்றி தீர்மானிக்க சம்பள நிர்ணய கமிஷன் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின் பேரில் உருவாக்கப்படவுள்ள இக்கமிஷனினால் ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமான அரசஊழியர்கள் பயனடைவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அதிரடிப்படை

பிணைக்கப்பட்ட நிலையில் வவுண தீவு முகாமுக்கு கொண்டு சென்றனர். அங்கு தலையாட்டியினால் நான்கு பேர் இனங் காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் காரைபோட்ட மடுவைச் சேர்ந்த சிவலிங்கம் ரவி (34), வெற்றிவேல் பாப்பா, வெற்றிவேல் சின்னப்பொடியன் (21), கொக்கட்டிச்சோலையைச்சேர்ந்த நாகமணி குமாரசிங்கம் (24) ஆகியோரே தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களாவர்.

## விடுதலைப் புலிகள் நாளை வெளிவருகின்றது

ஐப்பசி - கார்த்திகை மாத 'விடுதலைப் புலிகள்' இதழ் நாளை வெளிவருகின்றது. இந்த இதழ் இருபது பக்கங்களுடன் கடற்போர் சிறப்பிதழாக அமைந்துள்ளது. கரும் புலிகளான கப் வாமன், கப். லக்ஸ்மன் ஆகியோர்களது 'குருதிச்சுவடுகள்' கட்டுரைகளுடன் 'கடற்படைத் தளபதியை கைதுசெய்த பெண் கடற்புலித் தளபதி' என்ற தலைப்பில் லெப். சேனல் நளாயினி, மேஜர் மங்கை பற்றிய ஒரு கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. அத்துடன் 'விடுதலைப் போரின் இறுதி வெற்றியை உறுதி செய்யும் கடற்போர்' என்ற தலைப்பிலான ஒரு மதிப்பாய்வுக் கட்டுரையுடன் கடற்போர் பற்றிய வேறு சில கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன.

இதேவேளை 'சாகரவர்த்தனா' கப்பல் தகர்ப்பின் போது கைது செய்யப்பட்ட அதன் கப்டன் 'பொயாகொட' உடனான ஒரு நீண்ட நேர்காணலும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், 'போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும் தடைநீக்கியாகச் செயற்பட்ட தலைவனும்' எனும் போராட்ட வரலாற்றுக் கட்டுரையும், 'பெண்மை இங்கு புலியானதால் புறநானூறு புதிதாய் எழுதப்படுகின்றது' என்ற தலைப்பிலான கவியுரையும், 'ஒரு பேரினவாதியின் அவலச்சாவு' என்ற தலைப்பிலான ஒரு சிறு கட்டுரையும் உள்ளடங்கியுள்ளது.

மேலும், 'இயல்புநிலையை கொண்டுவர இனி என்ன தடை?' என்ற ஆசிரியர் தலையங்கத்துடன், சமரச முயற்சியில் இந்தியாவின் குறுக்கீடு சந்திரிகா செய்யப் போவது என்ன? என்ற தலைப்பிலான முன்பக்க செய்தி விளக்கமும் அடங்கியிருக்கின்றது.

### பெண்கள்

னுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என தெரியவருகின்றது.

அந்தோனியார் கோவில் முகாமைச் சேர்ந்த வயித்தி இமானுவேல் என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையும், முகுந்தன் முகாமைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை ஜேசுராசா என்பவர்கள் தவிர்ந்த ஏனையோரது பெயர் விபரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை இச்சம்பவத்தின்போது பலர் தப்பிவந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. மேற்படி கைது செய்யப்பட்டவர்களை மீட்டுத்தரும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் உறவினர்கள் கேட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. [சி]

### மீனவர்

யாழ். போதனா வைத்திய சாலையில் நீக்கப்பட்டன.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த இவரது வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மீட்கப்படாமல் கடலிலே விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது [17] [21]

### விடுமுறை

சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தை உதயமாகிறது என்பதையும் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஜனவரி 15 ஞாயிறு தைப்பொங்கல் என்பதையும் கவனத்தில்கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார்.

### வெளிநாட்டு

வான் பலஹோயன், அனித்தா புரதாப், செல்வத்துரை, நாகேந்திரன், றொபேர்ட் நிககலேஸ் பேர்க் என்பவர்களே வந்தனர்,

விமானம் மூலம் பலாலிக்கு வந்த இவர்கள் பின்னர் 'ஹபரணை' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்தனர். (யோ)

### ஊழல்

க்கா விமான நிலையத்தில் வெளியேறுவோரின் கடவுச்சீட்டுக்கள் தீவிரமாக பரிசீலிக்கப்படுவதாகவும், சந்தேகிக்கப்படுவோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்படுவதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நாளை

கைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

நாளை ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தினை தமிழீழமக்கள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடுவதற்கானஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

### வட்ட ரீதியாக

காக வைக்கப்படவுள்ளதால், ஆம் மாவீரர்களின் பெற்றோரை அந்தந்த வட்டங்களில் நடைபெறும் வைபவங்களில் கலந்துகொண்டு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி சிறப்பிக்கும் வண்ணம் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவிக்கின்றனர்

கோட்ட, வட்ட ரீதியாக மாவீரர் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் விபரம் வருமாறு,

வலிகாமம் கோட்டம்:- யாழ் வட்டம் - வட்டச் செயலகம் முன்பாக, ஆரியகுளத்திற்கு அண்மையில். நல்லூர் வட்டம் - நாவலர் மண்டபம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல். கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்கால்தரவைப் பிள்ளையார் கோவில் முன்றல். உடுவில் /தெல்லிப்பழை வட்டம் - சுண்ணாகம் சந்தி சண்டிலிப்பாய் வட்டம்-மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் முன்றல் சங்கானை வட்டம் - சங்கானைச் சந்தி.

வடமராட்சிக் கோட்டம்:- பருத்தித்துறை வட்டம்- கிராமக்கோட்டுச்சந்தி. கரவெட்டி வட்டம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் உடுப்பிட்டி வட்டம் - உடுப்பிட்டிச் சந்தி பிள்ளையார்கோவில் முன்றல்

தென்மராட்சிக் கோட்டம்- கைதடி வட்டம் - கைதடிச் சந்தி சாவகச்சேரி வட்டம் - தபாற்கந்தோர் சந்தி, நகர சபை வளவு. கொடிகாமம் வட்டம் - புகையிரதநிலையம் முன்னால். பளை வட்டம் - இரட்டைக்கேணி அம்மன் கோவில் முன்றல்.

தீவகக் கோட்டம்:- செற்பேலி பண்டிதர் குடியிருப்பு நாவற்குழி லவனிதா குடியிருப்பு அரியாலை டயஸ் குடியிருப்பு அரியாலை மணியரசன் குடியிருப்பு அரியாலை சாம்சன் குடியிருப்பு ஸ்ரீபன் [யாழ் புகையிரத நிலையம்] குடியிருப்பு முஸ்லிம் பகுதிக் குடியிருப்பு நவாலி மயூரன் குடியிருப்பு வடக்கம்பரை சத்தியக்காடு குடியிருப்பு சங்கானை நீதவான் குடியிருப்பு சுழிபுரம் பானாவெட்டி குடியிருப்பு வட்டு. துணவி குடியிருப்பு வடக்கம்பரை பூதராசிக் குடியிருப்பு சித்தன் கேணி குந்தவி குடியிருப்பு வட்டு, கலட்டி குடியிருப்பு.

மேலும், மாவீரர் வார ஆரம்ப நாளில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவதற்கு வட்டச் செயலகங்களில் தமிழீழத் தேசியக் கொடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோல் தமிழீழ மக்கள் தமது வட்டச் செயலகங்களில் மாவீரர் பொதுச் சின்னத்தைப் பெற்று பந்தல் அமைத்து மலர்மாலை அணிவித்துச் சுடரேற்றி தமிழீழ மாவீரர்களுக்கான வீரவணக்கத்தை மாவீரர் வாரத்திலும் மாவீரர் நாளிலும் செலுத்தலாம் என யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவிக்கின்றார்கள்.

## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் உளவிருத்தியை வளர்க்கும் நோக்குடன் ஈழநாதம் மக்கள் தினசரி, சிறுவர் அரங்கு எனும் புதிய பகுதியை விரைவில் தரவுள்ளது. மேற்படி அரங்கை அணிசெய்ய வாசகர்களிடமிருந்தும் சிறுவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இப்பகுதியில் பொது அறிவு எனும் வகையில் புதிய தகவல்கள் பலவும் வெளிவரவிருக்கின்றன.

## காமினியின் மைத்துனர் நாட்டைவிட்டு தப்பிஓட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகரும், காமினி திசாநாயக்காவின் மைத்துனருமான டாக்டர் விக்கிரம வீரசூரிய கடந்த வியாழனன்று இரவு பத்துமணிக்கு நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இவரை, நாட்டை விட்டு வெளியேறா வண்ணம் அரசாங்கம் தடை விதித்து இவரது நடமாட்டங்களை தொடர்ந்து கண்காணித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. எமிரேட்ஸ் பயண சேவையின் விமானம் ஒன்றின் மூலம் இவர் தற்போது சிங்கப்பூருக்கு சென்றிருப்பதாகவும், அவுஸ்திரேலியாவுக்கு செல்வதே இவரது திட்டமாக இருக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டாக்டர் விக்கிரம வீரசூரிய மேல், அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் ஏராளமாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது

### உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்,

இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில், 17 வயதுப் பிரிவில், யாழ் இந்துவை எதிர்த்து அராலி இந்துவும், 19 வயதுப் பிரிவில் யாழ் இந்துவை எதிர்த்து புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயமும் விளையாடும்.

இன்று மாலை 2 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவில் ஏழாலை ஸ்ரீமுருகனை எதிர்த்து விக்டோரியாவும், கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தை எதிர்த்து யாழ் இந்துவும். உரும்பிராய் இந்துவை எதிர்த்து சாவகச்சேரி இந்துவும் விளையாடும்

### மூக்குக் கண்ணாடி விநியோகம்

யாழ். லயன்ஸ் கழகம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு இலவசமாக நூற்றுக்கும் மேற்பட்ட மூக்குக் கண்ணாடிகளை இன்று 3.30 மணிக்கு பாஷையூர் பங்கு மண்டபத்தில் வைத்து வழங்கவுள்ளது இந் நிகழ்வின் போது மருத்துவக் கலாநிதி சிவபாலன் அவர்கள் 'நீரிழிவும் அதனைத் தடுக்கும் வழிகளும்' எனும் தலைப்பிற் பேசவுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகபூசனி குமரையா
(கோப்பாய்)

திருமதி நாகபூசனி குமரையா 18-11-94-ல் காலமானார் அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் அன்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமரையாவின் அன்பு மனைவியும் வசந்தாமணி (கனடா), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லூர் காலஞ்சென்ற சின்னத்தம்பி விசாலாட்சியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரெத்தினம், ஓய்வுபெற்ற தையல் ஆசிரியை ம. சரஸ்வதியின் அன்புச் சகோதரியும், ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா (இலங்கை) S. சச்சிதானந்தத்தின் (கனடா) அன்பு மாமியாரும் சுஜிவா, சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 19-11-94 சனிக்கிழமை கோப்பாய் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ம. சரஸ்வதி
(சகோதரி)

அன்னவாசா,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய், (10139)

### மாணிக்கம் கந்தையா

மாணிக்கம் கந்தையா 19-11-94 அன்று காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராஜன் (BAR), புஸ்பராணி, சாந்தினி, (கலா-ஜேர்மன்), இராஜன்பாபு (ஜேர்மன்), சுகிதா ஆகியோரின் தந்தையும், மா. நவரெட்தினராஜா (நவம் வயறிங், மோகனா, ஜீவாராணி ஆகியோரின்மாமனாரும், சாருஜன், சிந்து, நிறோ, நீலிகா, நிலானி, துசல்ஜன், துசானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இராஜன் (ஜேர்மன்), சாந்தன் (ஜேர்மன்), வெள்ளை [ஜேர்மன்] ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார். காலஞ்சென்ற சின்னம்மா, நாகலிங்கம், செல்லாச்சி, இராசதுரை, லட்சுமி, ராசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-11-94 இன்று ந. ப. 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கந்தையா இராஜன்
(இராஜன் BAR)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
கல்திட்டி. [10150]

### ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்
(முறிவு வைத்தியர், ஏழாலை)

ஏழாலை மேற்கு ஐயம்பிள்ளை வைத்திலிங்கம் (19-11-94) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பேரின்பநாயகம் (காசாளர், சுன்னாகம் ப.நோ.கூ.ச), புஷ்பராணி, பாலச்சந்திரன் (ஜேர்மனி), திருமதி கனகாம்பிகை நாகராஜா (பிரதேச செயலகம், நல்லூர்), கெங்காதரன் நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, சற்குணராஜா (மின்வளம்), செல்வநாயகி (இந்தியா), நாகராஜா (கணக்காளர், பிரதேச செயலகம் தெல்லிப்பளை), இராஜமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20-11-94) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. நாகராஜா
மருமகன்

''தரிஷிஸ்தான்,'
கருலேம்பன்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை. (10151)